

Tamilcnn இன்
# தாய்வீடு
# THAAIVEEDU

021 222 3303 | thaaiveedu@tamilcnn.com | வீடு 01 | ஜூலை 24 - ஜூலை 30, 2015

## தோற்கடிக்க நினைப்போருக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்!




## திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தீர்வு



## அமெரிக்காவில் கால் வைத்த முதல் இலங்கைத் தமிழருடன் ஓர் சந்திப்பு






## பாகுபலி வசூல் ரகசியம்

## சரிந்தது இசை உலகம்



NO 1 TOPAZ
TOPAZ®
No. 01 Shop in Jaffna
Specialist in Wedding Suits, Measure Tailoring, Wedding Sarees, Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
No.72, Grand Bazaar, Jaffna
E-mail : topazagn@gmail.com
Web : www.topazjaffna.com
021 2224743 | 021 2227645
Topazjaffna | Topazjaffna | Topazjaffna





சாரங்கா
நகைமாடம்
Saranga Jewellery
157/1, Grand Bazaar, Jaffna.
021 222 6972
021 222 8869

KIRUBA LEARNERS
KIRUBAA LEARNERS
Government Approved Driving Trainning School
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை



வடக்கில் எல்லா இடங்களிலும் எமது கிளைகள்
NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 021 492 3200 / 077 722 5292



ABI FASHION WORLD
Largest Textile SHOWROOM in Jaffna
112, K.K.S. Road, Jaffna.
021 222 3738



New Lovers Corner
special gift for your lover
13, First floor, Cargills Square, Jaffna.
164, Ramanathan Road, Jaffna.
0212227070



உங்கள் வியாபார நிறுவன விளம்பரங்கள்,
மரண அறிவித்தல்கள் என்பனவற்றை
மிகக்குறைந்த விலையில் உலகிற்கு தெரிவிக்க...

ஏன்
~~20,000.00~~?
3000.00
ரூபா போதுமே...

பிறந்தநாள் வாழ்த்துக்கள், பூப்புனித நீராட்டுவிழா,
திருமண வாழ்த்துக்கள், திருமண நினைவுகள்,
மங்கல நிகழ்வுகளை
உங்கள் உறவுகளிற்கு உடனடியாக தெரிவிக்க...

ஏன்
~~10,000.00~~? 1000.00
ரூபா போதுமே

இணையத்தில் ஓர் புரட்சி
Tamilcnn.lk
உண்மைகள் உடனடியாக உலகிற்று

@ news@tamilcnn.com North 021 222 3303 | 077 559 5921


பிரதான அலுவலகம் : கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வடக்கின் கணனிப் பூங்கா

intel

Your
one stop shop
for everything
related to PC

0777 570 124
northernpcpark
info@pcpark.co
www.pcpark.co



hp ASUS EPSON DELL

Northern
PC PARK PVT (Ltd)

SHOW ROOM 1 : #269E, Palay Road, Kantharmadam, Jaffna. Tel : 021 222 0388
SHOW ROOM 2 : #10, Muddaskadai Junction, Stanly Road, Jaffna. Tel : 021 222 2050

Tamilcnn இன் தாய்வீடு
THAAIVEEDU
021 222 3303 www.tamilcnn.lk thaaiveedu@tamilcnn.com

ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...

## வாக்காளப் பெருமக்களே..!

தேர்தல் திருவிழா சத்தமில்லாமல் களை கட்டி வருகிறது. இதுவரை காலமும் மக்கள் பிரச்சினைகளை தட்டிக் கழித்து கண்டுகொள்ளாமல் இருந்து வந்த அரசியல்வாதிகள் தற்போது ஊடகங்களின் வாசல்களையும், வீட்டுப் படலைகளையும் மீண்டும் தட்டத் தொடங்கி விட்டார்கள்.

எங்களை வாக்களித்து சிம்மாசனமேற்றுங்கள். நாங்கள் ஆகாய கங்கையை பூமிக்கு கொண்டு வரும் வல்லமை படைத்தவர்கள் என்கிற ரீதியில் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளையும் மக்கள் முன் வைத்து வாக்குக் கேட்டு வருகின்றார்கள்.

உண்மையில், தமிழர் பகுதிகளில் வாக்குக் கேட்டு வரும் கட்சிகள் தங்களது கடந்த தேர்தல் விஞ்ஞாபனங்களை மக்கள் முன் வைத்து அதில் எவற்றை எல்லாம் நிறைவேற்றி இருக்கின்றோம் என்பதனை இதய சுத்தியோடு சொல்லட்டும் பார்க்கலாம். நிச்சயமாக சொல்ல மாட்டார்கள். ஏனெனில் தேர்தல் விஞ்ஞாபனங்கள் எல்லாம் அந்தந்த தேர்தல்களுக்காக தயாரிக்கப்படும் விளம்பரங்கள் மட்டுமே. அவை தேர்தல் முடிந்த உடனே அரசியல்வாதிகளும் மறந்து விடுவார்கள்.

தேர்தல் காலங்களில் மட்டும் மக்கள் பகுதிகளில் முகாமிடும் எம் அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்த கையோடு வெளிநாடுகளுக்கு உல்லாச சுற்றுலா செல்வதோடு சொந்த வேலைகளையும் கவனிக்கத் தொடங்கி விடுவார்கள். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக தங்களுக்கு அரசு அளிக்கும் சலுகையை மட்டும் நிறைவாக அனுபவிப்பார்கள். ஆனால், மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள், பொறுப்புகளை மறந்து விடுகிறார்கள்.

இனியும் அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்ற முடியாது. மக்களுக்கு சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்கிற விடயத்தை ஊடகங்கள் தெளிவாக பரந்த தளத்தில் எடுத்துச் செல்ல வேண்டும். தொடர்ச்சியாக அரசியல் வாதிகளை கண்காணித்து வழிப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இள இரத்தம் கொண்ட இளமைத் துடிப்புள்ள இளைஞர்களை தேர்தல் களத்தில் உள்வாங்குவது தொடர்பில் கட்சிகள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். வாழ்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து கதிரைகளை அலங்கரித்து மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்காதவர்களை மக்கள் இனங்கண்டு வீட்டுக்கு அனுப்ப வேண்டும். வயது முதிர்ந்த அனுபவங்கள் உள்ளவர்கள் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக, ஆலோசகர்களாக மட்டுமே இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை களத்தில் நின்று செயல் வடிவம் கொடுப்பவர்களே எங்களுக்குத் தேவை. மேடையில் மட்டும் முழங்குபவர்களையும் எட்டி நின்று வேடிக்கை பார்ப்பவர்களையும் மக்கள் இனங் காண வேண்டும்.

ஏனெனில் தமிழர்களின் நிலங்கள் பச்சையாக ஆக்கிரமிக்கப் படுகிறது, கலை, கலாச்சாரங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது, பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனை புகுத்தப்படுகிறது. அதனூடாக இயற்கைக்கு முரணான வன்புணர்வுகள், படுகொலைகள் நித்தமும் அரங்கேறுகின்றன. எம் இனத்தையே அழிப்பதற்கான எல்லா முயற்சிகளும் திட்டமிட்ட வகையில் அரங்கேறி வருகின்றன. இறுதிப் போர் நடந்து முடிந்து ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், அதன் வடுக்கள் இன்னமும் அப்படியே உள்ளன.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்களது தேசியப் போராட்டம் சர்வதேசத்தை நோக்கி பரந்து விரிந்துள்ளது. சர்வதேச நாடுகள் எமது போராட்டங்களை, அவலங்களை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக் கின்றன. ஆகவே, எமது வேட்பாளர்களுக்கு இன்னும் பொறுப்புக்கள் கூடி உள்ளது. தமிழ் மக்களின் இன்னல்களை சர்வதேச சமூகத்தின் மத்தியில் பேசுபொருளாக்க வேண்டிய தேவையும், கடப்பாடுகளும் எம் அரசியல் வாதிகளுக்கு உள்ளது. அதனை இன்னும் காத்திரமாக இனிவருங் காலங் களில் நிறைவேற்றுவார்கள் என நம்புகின்றோம்.

காணாமல் போனோர் பிரச்சினை, உறவுகளை இழந்தோரால் இன்னமும் அதிலிருந்து மீள முடியாமல் உள்ளனர். உளவியல் ஆற்றுப் படுத்துகை இல்லாததால் அவதியுறுகிறார்கள். போராளிகள், மாவீரர் குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. சொந்த உறவுகளாலேயே அவர்கள் புறக்கணிக்கப்படும் அவல நிலை. இவர்களுக் கெல்லாம் உதவும் பொது நிதியத்தை உருவாக்கி புலம்பெயர் உறவுகளிடம் இருந்து நிதிகளைப் பெற்றுக் கொடுக்கும் திராணி படைத்தவர்கள் அவர்களைக் கண்டுகொள்ளாமல் விட்டதன் விளைவு கடைசியில் எம் உறவுகளை மாறாத் துயரத்திலும் தொடர் மன உளைச்சலிலும் உள்ளாக்கியுள்ளது. இதனை மக்கள் நன்கு அறிந்து வாக்கு எனும் ஆயுதத்தை வலுவாகப் பிரயோகிக்க வேண்டும்.

### உங்கள் எதிர்காலம் உங்கள் கையில்!

# தமிழரின் கொள்கைகள், இலட்சியத்தை தோற்கடிக்க நினைப்போருக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்!

மாவை சேனாதிராஜா



தமிழரின் கொள்கைகள், இலட்சியத்தை தோற்கடிக்க நினைப்போருக்கு இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் பாடம் படிப்பிக்க வேண்டும். இவ்வாறு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராஜா.

போர்க்குற்ற விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். இந்த விசாரணையின் அடிப்படையில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பான விடயங்களும் உள்ளடங்கியுள்ளதால் நாம் பலமாக இருந்தாலே விசாரணைகளை மேலும் விரைவுபடுத்த முடியும். இதற்கு மக்களின் வாக்குப் பலம் அதிகம் எமக்குத் தேவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழரின் ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் மௌனித்தது. இதனையடுத்து தமிழ் மக்களைத் தோற்றுப்போன சமூகமாகக் கருத்துக்களை வெளியிட்ட மஹிந்த ராஜபக்ஷவை எமது சமூகமே தோற்கடித்து வரலாறு படைத்தது. அதேபோன்று எமது கொள்கைகளை எங்களது இலட்சியத்தை எமது மண்ணிலே தோற்கடிக்க நினைப்போருக்கு இந்தத் தேர்தல் மூலம் பாடம் படிப்பிப்பதுடன், வடக்கு கிழக்கு மாகாணங்களில் எம்மால் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் அனைவரையும் வெற்றி பெறச் செய்து தமிழ் இனம் என்றும் யாருக்கும் அடிபணியமாட்டாது என்பதை தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும்.

இந்தத் தேர்தலில் எமக்கு தோல்வி ஏற்படுமாயின் எமது வேட்பாளர்களுக்கு கிடைக்கும் தோல்வி என்பதை விட எமது மக்களுக்கு கிடைக்கும் தோல்வியாகவே கருதவேண்டும். கடந்த பொதுத் தேர்தலில் எம்மால் முழுமையாக தேர்தல் பரப்புரைகளைக் கூட செய்யமுடியாத அளவுக்கு இராணுவ ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருந்தது. தேர்தல் நாளன்று கூட வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டதுடன் சிவில் உடையில் காணப்பட்ட இராணுவப் புலனாய்வாளர்கள் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர்.

அதனால் வாக்களிப்போர் வீதம் குறைவடைந்ததால் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். எதிர்வரும் தேர்தலில் அவ்வாறான நிலைமை இல்லாததால் தமிழ் மக்கள் அனைவரும் தமது வாக்குகளைச் செலுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எமது கட்சி சார்பில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் மக்களிடையே காணப்பட்ட அச்ச நிலை இன்னமும் நீங்கவில்லை என்பதை தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் கூட்டங்களில் கலந்துகொள்ளும் மக்களின் அளவுகளைக் கொண்டு கணிப்பிட முடிகின்றது. இவ்வாறான கூட்டங்களில் கலந்துகொள்வோர் அந்த மக்களின் அச்சத்தைப் போக்கக்கூடிய வகையில் அவர்களை ஊக்கப்படுத்தி தேர்தலில் வாக்களிக்கச் செய்யவேண்டும்.

தமிழ் மக்கள் ஏனோதானோ எனச் செயற்படுவது எதிரணியினருக்கு வாய்ப்பாக அமைந்து விடும். பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி இம்முறை தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடும் பேரினவாதக் கட்சிகளுக்கும், தமிழினத் துரோகக் கட்சிகளுக்கும் முகத்தில் கரி பூசுவது போல அவர்களை ஓரம் கட்டும் வகையில் தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும்.

இதற்கு தெற்கு மக்களும் மற்றும் வடக்கு, கிழக்கு மக்களும் இடம்கொடுக்கக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறுவது போல எமது கட்சிக்கு குறைந்தது 20 இடங்கள் கிடைப்பின் நிச்சயமாக பலம் பொருந்திய நிலையில் சர்வதேச சமூகத்திடம் எமது கோரிக்கைகளை விரைவுபடுத்துமாறு கோரலாம். எமக்குக் கிடைத்துள்ள சர்வதேச சந்தர்ப்பத்தை இழந்து விடக்கூடாது.

எனவே, வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபைகளின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது மக்களின் விடிவுக்குப் பாடுபடவேண்டும் என்றார். ■

# அமெரிக்காவில் கால் வைத்த முதல் இலங்கைத் தமிழர்

நேர்கண்டவர் : செல்வநாயகம் கிரிசாந்

அமெரிக்கா சென்ற முதல் இலங்கை மருத்துவர்அதுவும் தமிழர் என்ற பெருமைக் குரியவரும் அமெரிக்க விமானப்படையில் 20 வருடங்கள் மருத்துவராக கடமையாற்றிய பெருமைக்குரிய தமிழர் என்ற சிறப்புக்குரிய வருமான சாதனைத் தமிழர் திரு. டாக்டர் எஸ்.சிவப்பிரகாசம் ஐயா (பேபி) அவர்களை தாய்வீடு இதழிற்காக சந்தித்தேன்.

விடுமுறையில இந்தியா வந்திருந்தவரை சென்னையில் உள்ள ஹொட்டல் ஒன்றில் சந்தித்தேன். முதலில் அவர் நேர்காணல் என்றதும் மறுத்து விட்டார். பின்னர் நான் அவரிடம் உங்களின் சாதனை வாழ்க்கை அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டால் அது நிச்சயம் வளர்ந்து வருகின்ற இளைய தலைமுறைக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்று எடுத்துக் கூறினேன். பின்னர்அவரும் நேர்காணலுக்கு ஒத்துக் கொண்டார்.

அவரை முதன் முதலில் சந்தித்த போது அவரது எளிமையைக் கண்டு உண்மையிலேயே நான் வியந்து விட்டேன். இத்தனை சிறப்புத் தகுதிகளையும் வைத்துக் கொண்டு அவர் ஒரு எளிமையான மனிதராக எப்போதும் சிரித்த அன்பான முகத்துடன் காணப்படுகிறார்.

ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல் எல்லோருக்கும் சம மரியாதை தருகின்றார். அவர் வாழ்வில் பட்ட அனுபவங்கள்அவரைச் செதுக்கி இப்படியாக ஒரு நிறைகுடம் போல ஆக்கி விட்டது என்று நினைக்கிறேன்.

நான் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் முகம் சுளிக்காமல் பொறுமையாக ஆழ்ந்த பதில்களை வழங்கினார். அவரிடம் நேர்காணலைத் தொடங்கினேன்.

**கேள்வி :** வணக்கம் ஐயா, உங்களது ஆரம்பகாலம், பாடசாலைக் கல்வி, சொந்த மண்ணில் உறவாடிய அந்த நாட்களை சுருக்கமாக கூறமுடியுமா?

**பதில்:** நான் 1933 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பிறந்தேன். (மகாத்மா காந்தி பிறந்த தினமான ஒக்டோபர் இரண்டாம் திகதியே இவரும்பிறந்தார்.) என்னுடைய அப்பா ஒரு மருத்துவர். சிறுவயதிலேயே எனது தாய், தந்தை இருவரையும் இழந்து விட்டேன். பின்பு யாழ்ப்பாணத்தில் உள்ள திருநெல்வேலியில் அப்பப்பாவுடன் வளர்ந்தேன்.

பின்னர் அவரும் இறந்து விட நான் ஆறாவது படிக்கும்போது பெரிய அக்கா திருமணம் முடித்து விட்டார். பின்னர் அவருடன் தங்கி படிப்பைத் தொடர்ந்தேன். திருநெல்வேலி தமிழ்பாடசாலையில் மூன்றாம் வகுப்பு வரை படித்தேன். பின்னர் நான்காம் வகுப்பிலிருந்து யாழ் இந்துக்கல்லூரியில் சேர்ந்து கொண்டேன். பின்னர் யாழ் இந்துக் கல்லூரி மாணவர் விடுதியில் தங்கியிருந்து படிப்பைத் தொடர்ந்தேன்.



அப்போது தான் எனக்கு உதைபந்தாட்டம் மீது தீராக்காதல் ஏற்பட்டது. என்னுடைய உதைபந்துபயிற்சி ஆசிரியராக தியாகர் இருந்தார். அங்கு பாடசாலை மட்டங்களில் நடந்த ஏராளமான போட்டிகளில் பங்கு பற்றினேன்.

இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பாடசாலை சார்பாக நடந்த பயிற்சியில் பங்குபற்றினேன். உதைபந்து விளையாட்டு நான் கல்வியில் முன்னேறுவதற்கு ஒரு காரணமாக இருந்தது என்பது மறுக்க முடியாது. நான் யாழ் இந்துவில் படித்த காலப் பகுதியில் கல்லூரியின் அதிபராக திரு. குமாரசாமி இருந்தார். இவரின் காலத்தில் யாழ் இந்துக் கல்லூரி நிறைய வளர்ச்சிகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

SSC வரை அதாவது இன்றைய கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சை (O/L) வரை யாழ் இந்துக் கல்லூரியிலும் பின்னர் HSC அதாவது கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை (A/L) படிப்பை மாத்தளையில் தொடர்ந்தேன்.

அதன் பிற்பாடு இந்தியாவின் பூனேயில் மருத்துவப் படிப்பைத் தொடர முடிவு செய்தேன். மங்களூரர் மணிப்பால் மருத்துவக் கல்லூரியில் (Mangalore Manipal Medical College) இணைந்தேன்.

ஐந்து ஆண்டு கால மருத்துவப் படிப்பைத் தொடர்ந்தேன். அங்கும் உதைபந்து விளையாடினேன் படிப்பையும் நிறைவு செய்தேன். பின்னர் அமெரிக்கா போக வேண்டும் என்று முடிவு செய்து சென்னையில் விண்ணப்பித்தேன். அதற்கான அனுமதியும் கிடைத்தது.

அமெரிக்காவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் வேலை கிடைத்தது. உணவு தங்குமிட வசதிகளுடன் 99 டொலர்கள் தான் எனது முதல்சம்பளமாகப் பேசப்பட்டது.

**கேள்வி:** தமிழ் மருத்துவர்கள் லண்டன் போன்ற நாடுகளுக்கு போக முண்டியடித்த நேரத்தில் நீங்கள்அமெரிக்கா செல்ல முடிவு செய்ததன் பின்னணி? அங்கு போவதற்கு பட்ட சிரமங்களையும் எடுத்துச் சொல்லுங்கள்?

**பதில்:** கொழும்பு சென்று அமெரிக்கா செல்வதற்கு பாஸ்போர்ட், விசா எடுப்பதே பெரும்பாடாக இருந்தது. அங்குள்ள மனிதாபிமானம்மிக்க அலுவலர்கள் மூலம் இரண்டு விடயங்களும் சாத்தியமானது.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அமெரிக்காவுக்கான விசாவை வழங்கி பாராட்டி நீங்கள் தான் அமெரிக்கா செல்லும் முதல் இலங்கை மருத்துவர் என்று கூறினார். நல்ல சந்தோசமான தருணமாக அது அமைந்தது.

அடுத்தும் ஒருபிரச்சினை விமானக் கட்டணம் செலுத்தப்பணம் இருக்கவில்லை. அதற்கும் அங்குள்ள மனிதாபிமானம்மிக்க அதிகாரி ஒருவர் சொன்னார் Fly now and pay Later என்று அதாவது முதலில் அமெரிக்காவுக்கு செல்லுங்கள் பின்னர் அங்கு உழைத்து மாதா மாதம் விமானக் கட்டணத்தைச் செலுத்துங்கள் என்று கூறினார்.




அந்தநேரம் அமெரிக்காவுக்கான விமானக் கட்டணம் மிகக்குறைந்த ரூபாய்களாகவே இருந்தது. விமானத்தின் பெயர் BOAC (British Overseas Airways Corporation) என்று அழைக்கப்படும். இலங்கையிலிருந்து லண்டன் சென்று அங்கிருந்து அமெரிக்கா சென்றேன்.

விமானத்தில் அந்த நேரம் உண்ணுவதற்கு தரப்பட்ட பக்கெட் உணவுகளைக்கூட எதற்காக இவையெல்லாம் தருகிறார்கள்? இவற்றை என்ன செய்ய வேண்டும் என்ற தர்மசங்கடமான நிலை ஏற்பட்டது. இப்படியாக அல்லல்பட்டு ஒருவாறாக அமெரிக்கா போய்ச் சேர்ந்தேன்.

அந்தநேரம் இலங்கை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஒருவிமானம் வந்து தரையிறங்கினால் புழுதி பறக்கும் அளவுக்கு சுற்றுப்புறம் இருக்கும். பெரிதாக அபிவிருத்தி அடையவில்லை.

**கேள்வி :**நீங்கள் பார்த்த அமெரிக்கா எப்படி இருந்தது?

**பதில் :** 1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்கா போய் இறங்கி விமான நிலையத்தில் இருந்து மருத்துவமனைக்கு செல்வதிலும் சிக்கல் ஏற்பட்டது. முதலில் விமான நிலையத்தில் போய் இறங்கி குறித்த மருத்துவமனைக்கு போவதில் ஒரு பெண்மணியும், கார் ஓட்டுனரும் பாதை காட்டுகிறேன் என்று ஏமாற்றி விட்டார்கள்.

இருந்தும் நான் குறித்த இடத்தைச் சென்று அடைந்து விட்டேன். மருத்துவமனைக்கு போய் அங்கு மருத்துவராக இணைந்து கொண்டேன். அமெரிக்காவின் நியுஜெர்சி மாநிலத்தில் உள்ள Jersey city என்ற

இடத்தில் உள்ள Chirst hospital தான் நான் முதன் முதலில் மருத்துவராகப் பணியாற்றினேன்.

**கேள்வி:** அமெரிக்காவில் மருத்துவராக வேலை பார்த்த அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்?

**பதில்:** *1961* ஆம் ஆண்டு டிசம்பர் ஆரம்பத்தில் மருத்துவராக சேவையை அமெரிக்காவில் தொடங்கினேன். அங்கு இந்திய மருத்துவ சிகிச்சை முறைகளுக்கும், அமெரிக்க மருத்துவ சிகிச்சை முறைகளுக்கும் பாரிய வேறுபாடு காணப்பட்டது.

அங்கிருந்த தாதியர்கள் மற்றும் அனுபவமான மருத்துவர்களின் உதவியினால் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் கற்றுக் கொண்டேன்.

உதாரணமாக நம்மூர் மருத்துவமனைகளில் நோயாளிக்கு சிறுநீர் போவதற்கான குழாய்பொருத்துவதாக இருந்தால் ஓடலி என்று அழைக்கப்படும் மருத்துவப் பணியாளர் பொருத்துவார்.

ஆனால் அமெரிக்காவில் அந்த வேலையை மருத்துவர் தான் செய்ய வேண்டும். ஒருவாறாக ஒருவருடம் கஷ்டப்பட்டு உள்ளகப் பயிற்சியை முடித்தேன். அதன் பின்னர் மேலதிக நேரம் வேலை செய்து நன்றாக உழைத்து 300 டொலரில் எனது முதலாவது காரை வாங்கினேன்.

**“ அமெரிக்க விமானப்படையின் மருத்துவப்பிரிவில் நீண்டகாலம் பணியாற்றிய ஈழத்தமிழ் மருத்துவருடன் ஓர் சந்திப்பு ”**

**கேள்வி:** அமெரிக்காவில் உங்களது தனிப்பட்ட அனுபவங்கள்?

**பதில்:** அங்கு அந்த நேரம் நிறவெறி கோரத் தாண்டவமாடிய காலம். கறுப்பு, வெள்ளை என்ற பாகுபாடு எங்கும் எதிலும் எதிரொலித்தது. கறுப்பர்கள், வெள்ளையர்களுக்கு எல்லா இடங்களிலும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப் பட்டிருந்தது.

மலசல கூடத்திலிருந்து, ஹோட்டல்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள் என்று எல்லா இடங்களிலும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப் பட்டிருந்தது. ஆனால் என்னை கறுப்பர்களும் சரி, வெள்ளையர்களும் சரி அவர்கள் தங்களுக்கு சமமாக மதித்தார்கள். ஏனென்றால் காந்தி தேசத்துக்கு பக்கத்தில் இருந்து வருகின்றபடியாலும், காந்திமீது அவர்கள் வைத்திருக்கின் மதிப்பினாலும் தான் இது சாத்தியமானது.

**கேள்வி :** அமெரிக்க இராணுவத்தில் மருத்துவராக பணியாற்றிய அனுபவங்கள்?

**பதில்:** அமெரிக்காவிலிருந்து லண்டன் சென்று அங்கும் இரண்டு வருடங்கள் மருத்துவராகப் பணியாற்றினேன். பின்னர் இலங்கை சென்று திருமணம் முடித்து விட்டு மீண்டும் மனைவியோடு அமெரிக்கா திரும்பினேன். அங்கு கிறீன் கார்ட் (Green Card) எனப்படும் நிரந்தரவதிவிட உரிமை எனக்கும் மனைவிக்கும் கிடைத்தது.

முதலில் அமெரிக்காவின் சிக்காக்கோவில் மருத்துவராகப் பணியாற்றினேன். அங்கு ஒருசிக்கலான விடயம் என்னவென்றால் மருத்துவ அனுமதிப் பத்திரம் (Medical Licence ) ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத் திற்கு செல்லும் போது மாற்ற வேண்டும்.



தற்போது போல எல்லா முழு அமெரிக்காவுக்கும் சேர்த்து ஒரே மருத்துவ அனுமதிப் பத்திரம் கிடையாது. அந்த நேரம் வியட்நாம் போர்நடந்து கொண்டிருந்த காலம்.

வியட்நாம் போரில் அமெரிக்கப்படைகளுக்கு மருத்துவராகப் பணியாற்ற எல்லா மருத்துவர்களும் வியட்நாமுக்கு செல்ல வேண்டும். எனக்கும் செல்ல அழைப்பு வந்தது. ஆனால் நான் பணியாற்றிய மருத்துவமனை கேட்டுக் கொண்டதற்கு இணங்க கடைசி நேரம் வியட்நாம் செல்வது தவிர்க்கப்பட்டது. வியட்நாம் போரின் இறுதிக் காலப் பகுதியில் நான் அமெரிக்க விமானப் படையில் *1974* ஆம் ஆண்டு மருத்துவராக இணைந்தேன். அங்கு எனக்கு விமானப்படையினருக்கு உரிய அடிப்படைப் பயிற்சிகள் தந்தார்கள்.

நான் இலங்கைக்கு பக்கத்தில் உள்ள விமானப் படைத்தளத்தில் பணியாற்ற விரும்பினேன். அதனால் என்னை தாய்லாந்துக்கு அனுப்பினார்கள். அங்கு ஒரு வருடம் மருத்துவச் சேவை செய்தேன். பின்னர் ஜப்பானில் ஆறுமாதம் வருடங்களும், அதன்பிறகு ஒரு வருடம் வடகொரியாவில் வேலை செய்தேன்.

பின்னர் ஒன்றரை வருடங்கள் துருக்கியில் பணியாற்றினேன். அதன் பின்னர் மூன்று வருடங்கள் லண்டனிலும் பணியாற்றினேன். அங்கு மருத்துவச் சேவையில் பல்வேறு தராதரங்களில் பணியாற்றினேன்.

**கேள்வி:** நீங்கள் அமெரிக்க விமானப் படை மருத்துவராக பணியாற்றிய காலத்தில் பெருமையாக நினைப்பதும், திருப்தி கொள்ளும் விடயங்களும் எவை?

**பதில்:** நான் பல்வேறு நாடுகளிலும் மருத்துவராகப் பணியாற்றிய போது அந்த அந்த நாடுகளுக்கு சுற்றுலா பயணிகளாக வரும் அமெரிக்கப் பிரஜைகளுக்கு ஏதாவது மருத்துவ உதவிகள் தேவைப்பட்டால் நானே நேரடியாகச் செய்தும் இருக்கிறேன்.

அவர்களுக்கு தீவிரமருத்துவக் கோளாறு என்றால் அமெரிக்க ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிசகல மருத்துவ வசதிகளும் உள்ள அமெரிக்க விமானப் படைவிமானத்தில் (Evacuation Air Plane) மூலம் அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளேன்.

இப்படி மனிதாபிமானஅடிப்படையில் பலரது உயிர்களையும் காப்பாற்றி உள்ளேன். அமெரிக்காவின் வேர்ஜினியாவில் கடைசி ஐந்து வருடங்கள் கொமாண்டராக பணியாற்றினேன். ஒரு முழு மருத்துவமனைக்கும் நானே பொறுப்பாக இருந்தேன். நேரம் தவறாமையை வலுவாக கடைப்பிடித்தேன்.

*1974 - 1994* வரை அமெரிக்க விமானப் படையில் மருத்துவராகப் பணியாற்றினேன். அதன்பிறகு *1994 - 1998* இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று Cilvil Services இல் அரச மருத்துவமனையில் பணியாற்றினேன்.

இராணுவத்தில் இணைய முன்னரும் நான் அரசதுறையில் மருத்துவராக இருந்தமையால் எனக்கு இரண்டு ஓய்வு கிடைத்தது.

**கேள்வி:** நீங்கள் தன்னலம் கருதாத மருத்துவ சேவையின் மூலம் பெற்ற விருதுகள் பற்றி கூறமுடியுமா?

**பதில்:** அமெரிக்க விமானப்படையில் சிறப்பாக மருத்துவராகப் பணியாற்றியமைக்காக அமெரிக்க ஜனாதிபதியால் வழங்கப்படும் உயரிய விருதான Us President Award for Meritorious Service விருது கிடைத்தது.

வியட்நாம் யுத்தத்தின் இறுதிக் காலப் பகுதியில் தாய்லாந்தில் உள்ள அமெரிக்க விமானப் படைத் தளத்தில் இருந்து வியட்நாமில் காயமடைந்த போர் வீரர்களுக்காக சேவை செய்ததற்காக Vietnam Veteran என்ற கௌரவமும் கிடைத்தது.

லண்டனில் மருத்துவப்பணியாற்றிய காலத்தில் Member Royal Society of Health என்ற சான்றிதழும் கிடைத்தது.


இதெல்லாம் தாண்டி லண்டன், கனடா, இலங்கை, அமெரிக்கா (வோஷிங்டன், வேர்யினியா, டெல்வயர், நியூயோர்க்) போன்ற இடங்களில் மருத்துவராகப் பணியாற்றுவதற்கான மருத்துவ அனுமதிப்பத்திரம் வைத்திருக்கிறேன். இவற்றை எல்லாம் நான் எனக்கு கிடைத்த கௌரவமாக, பெருமையாக கருதுகிறேன்.

**கேள்வி:** ஈழத் தமிழர்களுக்கான உங்களுடைய பங்களிப்பு என்ன?

**பதில்:** ஈழத் தமிழர்கள் வாழும் முகாம்களுக்கு ஈழ ஏதிலியர் அமைப்பின் ஊடாக மருத்துவ ஆலோசனைகளையும் மருத்துவ முகாம்களையும் நடாத்தினேன்.

**கேள்வி:** இவ்வளவு அனுபவங்களைப் பெற்ற நீங்கள் இளைய தலைமுறையினருக்கு கூறவிரும்புவது என்ன?

**பதில் :** நீ மலை ஏறவேணும் என்று நினைத்தால மலை ஏறலாம். மற்றவர்களுக்கு உதவியும் செய்யலாம். உலகத்தில் ஒருவருக்கு உதவி செய்ய வேணும் என்றால் நல்ல உயரத்துக்கு வரவேண்டும். உனக்கு நீ உதவி செய்ய வேண்டும். நீ நன்றாக படித்து முன்னேற வேணும்.





நேர்மை எப்போதும் இருக்க வேணும். நேரம் தவறாமை எப்போதும் அதைவிட முக்கியம். கடல் அளவு அனுபவம் மிக்க ஒருவருடன் உறவாடியதை எண்ணி பெருமிதத்துடன் அங்கிருந்து புறப்பட்டு அவரை பற்றி இன்னும் தேட வேண்டும் என்ற எண்ணத்துடன் உறவினர் ஒருவரை தொடர்பு கொண்ட போது எனக்கு இன்னும் அவர் மீதான மரியாதை அதிகரித்தது ஈழத்திலிருந்து சென்றவர்களுக்கு அவர்களுக்கான மேற்படிப்பிற்கான உதவிகளை வழங்கியதோடு அமெரிக்க சென்று படிப்பினைத் தொடர்வதற்கும் உதவிக் கரம் நீட்டியுள்ளார்.


இவ்வளவு பெருமைகளையும் தன்னகத்தே கொண்டு எளிமையாக எல்லோருடனும் பழகும் உயரிய மனிதராகவே அவரை நான் என்றும் பார்க்கிறேன். திரு.சிவப்பிரகாசம் ஐயா நான் என் வாழ்வில் என்றும் மறக்க முடியாத ஒரு மனிதராகி விட்டார். ■



பாராளுமன்றத் தேர்தல் 2015
சிவன் பவுண்டேசன் ஸ்தாபகர்
வேலாயுதம் கணேஸ்வரம்
(கொடைவள்ளல், சமூக ஆர்வலர்)
6
6
சுயேட்சைக்குழு–06




பாராளுமன்றத் தேர்தல் – 2015
வன்னி மாவட்டம்
7
V.S.விசாகப்பெருமாள்
(அகில இலங்கை சமாதான நீதவான்,முன்னாள் கிராம சேவையாளர்
GI – GSO, Acting AGA in 1990, J.P All island)
வன்னி மக்களின் விடிவெள்ளியாய்
நீண்ட காலமாக மக்களுக்காக
தன்னை சமூகசேவையில்
அர்ப்பணித்துக்கொண்டிருக்கும்
மக்கள் சேவகர்
தமிழர் விடுதலைக் கூட்டணி

பாராளுமன்றத் தேர்தல்
வன்னி மாவட்டம்-2015
இலங்கை தமிழரசுக்கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
6
மா.றோய்
(ஓய்வு நிலை வங்கி முகாமையாளர்)
வாக்களிப்பது உங்கள் உரிமை கடமை







ashmi PRINTERS
creative ideas designs
அஸ்மி பிறிண்டேர்ஸ்
அச்சுப்பதிப்பு
டிஜிற்றல் பிறிண்டிங்
அழைப்பிதழ்கள்
ரீ-சேட் பிறிண்டிங்
ஸ்ரிக்கர் கட்டிங்
மாபிள் பிறிண்டிங்
Paranthan Road,
Puthukkudiyiruppu.
077 645 5060
021 206 1514

# வாக்குக் கேட்டு வரும் வேட்பாளர்களிடம் தமிழ்மக்கள் கேள்வி கேட்க வேண்டும்

அரசியல் சமூக ஆய்வாளர் - **நிலாந்தன்**



தமிழ் மக்கள் கடந்த ஆறு ஆண்டு காலமாகப் பெற்றுக் கொண்ட படிப்பினைகளின் அடிப்படையில் தான் இம் முறை பொதுத் தேர்தலில் முடிவெடுக்க வேண்டும். இந்த ஆறு ஆண்டு காலம் எனப்படுபவை சாதாரண ஆறு ஆண்டுகளல்ல. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்ததன் பின்னரான ஆறு ஆண்டுகள்.

கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ் மக்கள் இரு ஜனாதிபதித் தேர்தல்கள். இரு பாராளுமன்றத் தேர்தல்கள். உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாணசபைத் தேர்தலென மொத்தம் ஆறு தேர்தல்களைச் சந்தித்திருக்கின்றனர். அந்த ஆறு தேர்தல்களிலும் அவர்களுடைய தலைவர்கள் வழங்கிய வாக்குறுதிகள் எத்தனை? அவற்றில் எத்தனை வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறார்கள்? எத்தனை வாக்குறுதிகள் பொய்யாகத் தரப்பட்டவை? எத்தனை வாக்குறுதிகள் விசுவாசமாகத் தரப்பட்டவை? போன்றவற்றின் அடிப்படையில் தான் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க வேண்டும். இந்த முறை பொதுத் தேர்தலில் வாக்குக் கேட்டு வரும் வேட்பாளர்களிடம் தமிழ் மக்கள் கேள்வி கேட்க வேண்டும்.

இந்தப் பிராந்தியத்திலேயே மிக மோசமான பயங்கரமான தோல்விக்கும் பேரிழப்பிற்கும் உள்ளாகிய எமது மக்கள் கடந்த ஆறு ஆண்டு காலமாக சுகப்படுத்தப்படாத கூட்டுக் காயங்களுடனும். மன வடுக்களுடனும் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டு காலங்கள் கடந்த பின்னரும் சரியானதொரு அரசியல் தீர்வினைக் காண முடியவில்லையே? ஏன்? ஆயுதப் போராட்டம் தான் அரசியல் தீர்வுக்குத் தடை எனில் ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்னரும் ஒரு அரசியல் தீர்வினைக் காண முடியாததன் காரணம் என்ன? இந்தத் தீர்வு விடயத்தில் தமிழ்த் தலைமைகள் இதுவரை என்ன செய்திருக்கிறார்கள்? குறிப்பாகக் கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி எங்கே கொண்டு வந்து விடப்பட்டிருக்கிறது? என்பது தான் முக்கியம்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்ட அமைப்பிருந்தது . அதற்கென படை பலமிருந்தது. உள்நாட்டு மற்றும் அனைத்துலக வலைப்பின்னல் காணப்பட்டது. ஆனால் தற்போது எதுவும் கிடையாது. தமிழ் மக்களைப் பொறுத்த வரை தற்போதைய அவர்களது பேரம் பேசும் சக்தி அவர்களால் தெரிவு செய்யப்பட்ட தலைமைகள் தான். ஆனால் கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ்த் தலைமைகள் தமிழர்களுடைய பேரம் பேசும் சக்தியை தாழ்த்தியிருக்கிறார்களா ? அல்லது உயர்த்தியிருக்கிறார்களா? எனச் சிந்திக்க வேண்டும்.

ராஜபக்ஸவைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிப்பதற்காக தமிழ் மக்களின் பிரச்சினைகளையும். இலங்கையில் நடந்த போர்க்குற்றத்தையும் அனைத்துலகச் சமூகம் குறிப்பாக மேற்குலக நாடுகள் ஒரு கருவியாகக் கையாண்டன. அப்போதைய நிலையில் அனைத்துலக அரங்கில் தமிழ் மக்களுடைய பேரம் பேசும் சக்தி தற்போதைய நிலைமையை விடவும் உயர்வாகவிருந்தது. அதே போன்று ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிக்க வேண்டும்? யாரை ஆதரிக்கக் கூடாது? என்பது தொடர்பில் இந்தியாவோடும். மேற்குலக நாடுகளுடனும் சிங்களத் தலைவர்களுடனும் பேரம் பேசக் கூடிய சக்தி அப்போது தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்டது.

ஆனால் அந்தப் பேரம் பேசும் சக்தி எதிர்காலத்திலும் நீடிக்குமா? எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அமையவிருக்கும் பாராளுமன்றம் தமிழ் மக்கள் மத்தியில் எந்தளவுக்குத் தங்கியிருக்கப் போகிறது? என்பதில் தான் தமிழ் மக்களின் எதிர்காலமும் தங்கியுள்ளது.

தொகுப்பு - செ.ரவிசாந்

# தேச அங்கீகாரம் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும்

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

இனப் பிரச்சினையென்பது தமிழ்த்தேசம் அழிக்கப்பட்டு வருவதனால் ஏற்பட்ட பிரச்சினையே. தமிழ்தேசத்தை தாங்கும் தூண்களான நிலம், மொழி, பொருளாதார, கலாச்சாரம் என்பன திட்டமிட்டு அழிக்கப்படுவதனால் ஏற்பட்ட பிரச்சினையே. இதுவரை கால இன விடுதலைப் போராட்டம் தமிழ்தேசத்தை அழிப்பவனுக்கும், அவ்வழிப்பில் இருந்து தேசத்தை பாதுகாக்க முயல்பவர்களுக்கும் இடையிலான போராட்டமே. எனவே தேசத்தை அங்கீகரிப்பது தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.




யாழ்ப்பாணம் வடமராட்சி குடத்தனையில் அண்மையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவும் மேற்குலகும் 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தை அரசியல் தீர்வாக திணிக்க முயற்சிக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதற்கேற்ப தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கின்ற தமிழ் மக்களின். அடிப்படைக் கோட்பாட்டையும் கைவிட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாடு தமிழ்த் தேசிய அரசியலை செங்குத்தாக கீழ் இறக்குகின்றது. 13 ஆவது திருத்தமும் அதன் அடிப்படையிலான மாகாண சபை முறையும் எந்த வகையிலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்கப் போவதில்லை. வரதராஜப்பெருமாளின் வட, கிழக்கு மாகாணசபையும், பிள்ளையானின் கிழக்கு மாகாணசபையும், விக்னேஸ்வரனின் வடமகாண சபையும் அதனை தெளிவாக நிரூபித்துள்ளது.

வரதராஜப் பெருமாள் மாகாண சபை முறையில் எந்தவித பயனும் இல்லை எனக் கூறி ஈழப் பிரகடனம் செய்தார். பிள்ளையான் ஒரு பீயோனை நியமிக்கும் அதிகாரம் கூட தனக்கு இருந்திருக்கவில்லை. எனக் கூறினார். விக்னேஸ்வரனின் கருத்துகள் ஆளுநரை மாற்றிய பின்னரும் கூட குறையவில்லை. இவ்வளவு அனுபவத்தின் பின்னரும் கூட மாகாணசபை முறையினை அரசியல் தீர்வாக ஏற்றுக் கொண்டால், அவர்களை துரோகிகளாகவே கருதவேண்டும். இந்த தேர்தலில் மக்கள் அவர்களை இனங் கண்டு புறக்கணிக்க வேண்டும் என்றார்.

# திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தீர்வு!

## லண்டனில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன்

பல தசாப்தங்களாக இலங்கையில் தொடர்ந்து வரும் இனப்பிரச்சனைக்கு திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வுகாண அனைவரையும் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் லண்டனில் இடம்பெற்ற சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் கலாச்சார நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விசேட உரையாற்றுகையிலேயே அவர் இவ் அழைப்பை விடுத்தார்.

அங்கு அவர் முக்கியமாகத் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

அழகிய இலங்கைத் தீவில் வாழும் இனங்கள் அமைதியாகவும், அன்பாகவும், ஆனந்தமாகவும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் வாழ வேண்டும் என்பது எனது விருப்பம். அதற்காக நான் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றேன். எதிர்காலத்திலும் முடியுமான வரையில் இதற்காக மென்மேலும் பணியாற்ற வேண்டும் என திடசங்கற்பம் பூண்டுள்ளேன். அதேவேளை, தமிழ் மக்கள் தங்களுடைய தேசத்தில் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழ வேண்டும் என்பதிலும் நான் உறுதியாக இருக்கின்றேன்.


எமது தேசத்தில் வாழும் இன்றைய சந்ததிக்கும், இலங்கைத் தீவுக்கு வெளியே வாழும் இன்றைய சந்ததிக்கும் இடையிலான தொடர்பு மலர்ச்சி அடைய வேண்டும். அது இன்னும் ஆழமாக வேரூன்ற வேண்டும் என்பது எனது அவா. எமது தேசத்திலும் வெளிநாடுகளிலுமுள்ள அடுத்தடுத்து வருஞ் சந்ததிகளுக்கிடையிலான தொடர்புகள் மிக நெருக்கமாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற எனது கருத்தையும் மிக ஆணித்தரமாக இங்கு வெளியிடுகின்றேன்.

இதற்காக எமது இளைய சமுதாயத்தினரை நாம் தயார்படுத்த வேண்டும். அவர்கள் எங்கே பிறந்து எங்கே வாழ்ந்தாலும், அவர்களது பெற்றோர்களின் அவர்களின் மூதாதையர்களின் பிறந்த மண் அவர்களுக்கான அடிப்படை அடையாளங்களில் ஒன்று. அந்த அடையாளத்திற்கு ஒரு தனித்துவம் இருக்கின்றது. வலு இருக்கின்றது. அந்த வலுவானது எமது அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

எமக்குப் புலிப்பட்டம் கட்டி, பயங்கரவாதப் பட்டம் கட்டி புகுந்தகத்தில் இருந்து பிறந்தகத்திற்கு வராது தடுக்க சதிகள் நடைபெற்று வருவதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாம் இலங்கை நாட்டுத் தமிழர் பாரம்பரியத்தில் பிறந்தவர்கள் என்பதைப் பெருமையுடன் எடுத்துக் கூறும் காலம் மலர வேண்டும். அதை விட உலக ரீதியான பெருமை மிக்க தமிழர் பரம்பரையின் பலத்த அலகுகள் நாம் என்பதையும் எம் சிந்தனையில் நாம் வேரூன்றி வைக்க வேண்டும்.

சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் அரசியல் தீர்வுக் காண செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது திம்புக் கோட்பாடு. திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் தேர்தல் விஞ்ஞாபனம் அமைவது தமிழர்களின் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கும். சிங்கள தேசம் எதனை தர தயாராக இருக்கின்றது என்ற அடிப்டையில் தமிழர்களுடைய செயற்திட்டங்களை வகுக்க முடியாது. மாறாக, தமிழர்களுக்கான உரிமையையும் நீதியையும் அடைவதற்கான உபாயங்களின் அடிப்படையிலான செயற்திட்டங்கள் முன்னெடுக்க வேண்டும். தோல்வி மனப்பான்மையுடையோருக்கு இது எட்டாக் கனியாக தெரியலாம். அரசியலென்பது சாத்தியமற்றதை சாத்தியமாக்குகின்ற சவாலான பயணம். தளராத தன்னம்பிக்கையுடன், அடிப்பணிவின்றி தொடர்சியாக செயற்படுவதனாலேயே இதனை செயற்படுத்த முடியும்.

1921ம் ஆண்டில் சிங்கள மக்கட் தலைவர்கள் சேர் ஜேம்ஸ் பீரிசும் , ஈ. சமரவிக்கிரம என்பவரும் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ்பேசும் மக்களே பெரும்பான்மையினர் என்றும் மற்றைய மாகாணங்களில் தான் சிங்களம் பேசும் மக்கள் பெரும்பான்மையினர்




என்றும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இதை எதற்காகக் குறிப்பிடுகின்றேன் என்றால் நாங்கள் எங்கிருந்தோ வந்து சேரந்த சிறுபான்மையினர் அல்ல. அதாவது வேறெங்கோ இருந்து விரட்டப்பட்டதால் இங்கு வந்து குடியேறிய சிறுபான்மையினர் அல்ல. எமக்குரித்தான தனித்துவ தேசிய அந்தஸ்து, சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகளை விடுத்து இலங்கைத்தமிழர் வெறும் சிறுபான்மையினம் என்ற வாதத்தைப் பயன்படுத்தும் எம்மவர் யாராக இருந்தாலும் அதனை அவர்கள் தவிர்க்க வேண்டும். தமிழ் மக்களுக்கு உரிமைகளையும் நீதியையும் பெற்றுத் தர அர்ப்பணிப்போடு அவர்கள் செயற்பட முன்வரவேண்டும்.

தமிழினத்துக்கு நடந்த இனஅழிப்பை வெளிப்படுத்தத் தயங்கும் அல்லது தடுக்கும் தமிழர்கள் தொடர்பாக அவர்களின் அரசியல் நெறி தொடர்பாக எமது மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும். சட்டத்தால் சகித்துக் கொள்ளப்பட்டால் தான் இன அழிப்பை ஏற்கலாம் என்ற இன்றைய சில சாரரின் கருத்தை ஏற்பது சற்றுக் கடினமாகத்தான் இருக்கின்றது. எனினும் சட்டம் சரியென்று ஏற்கும் என்ற திடமான நம்பிக்கையுடன் தான் நாங்கள் இன அழிப்புப் பிரேரணையைக் கொண்டு வந்தோம்.

தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகவே தமிழ் அரசியல் கட்சிகளுடனான உறவை சிங்கள அரசியல் கட்சிகள் பாவிக்கின்றன. சனவரி 8 ல் நடந்த ஆட்சி மாற்றமும் அத்தகைய ஒன்றே. “ஏமாற்று வித்தைகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாம் இனியும் ஏமாறும் இனமாக இருக்க முடியாது”. எமது மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சிதைக்கும் இராணுவ ஆக்கிர மிப்பை விலக்குவதற்குப் புதிய ஆட்சியாளர்களும் இதய சுத்தியுடன் செயற்படவில்லை. எமது மக்களுக்குச் சர்வதேச விசாரணை ஒன்றின் மூலம் நீதி கிடைப்பதற்கு ஒரு கால்வாயாக அமையவிருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அறிக்கையைப் பிற்போடுவதற்காக புதிய அரசாங்கம் பாடுபட்டது. இறுதியில் தங்கள் முயற்சியில் வெற்றியுங் கண்டுள்ளார்கள். இதனைத் தங்களது வெற்றியாகவும் கொண்டாடினார்கள்”. சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகவே தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும்.

நேர்மையான அரசியல், கொள்கையில் உறுதி, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய மனோபாவம், தூர நோக்குப் பார்வை, எந்தக் கட்டத்திலும் எந்த காரணத்திற்காகவும் விலைபோகாத மனோதிடம் கொண்ட அரசியல்வாதிகளே எமக்குத் தேவைப்படுகிறார்கள்.

அத்துடன், தமிழர்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி, எமது மக்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களே எமது மண்ணுக்கும் மக்களுக்குமாக இன்றைய காலத்தில் தேவையாக இருக்கின்றார்கள். அதனை உணர்ந்து அவர்கள் தமக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை, தார்மீகக் கடமையைச் சரிவரச் செய்வதற்கு நான் துணையாக நிற்பேன்.

உரிமை மறுக்கப்பட்டதாலும் அநீதி தொடர்ந்ததாலுமே எமது இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். அத்தகையவர்களின் தியாகத்தை நாம் வீணடிக்கக் கூடாது, கொச்சைப்படுத்தக் கூடாது. அவர்களின் உற்றார் உறவினர்கள் இன்றும் வந்து எம்முன் கண்ணீர் சிந்துவதைக் காண்கின்றேன். எனவே தான், தேர்தல் காலங்களில் வாக்குகளை அள்ளுவதற்காக மட்டும் அவர்களைப் பயன்படுத்தி விட்டு மற்றைய காலங்களில் அவர்களின் அர்ப்பணிப்புக்கு அபகீர்த்தியையும் அவமானத்தையும் ஏற்படுத்துவதுவதை நாங்கள் தவிர்க்க வேண்டும். ■

நேர்காணல்

# தேர்தல் களம் 2015

**பொதுத் தேர்தல் தொடர்பாக வடக்கு , கிழக்கு வேட்பாளர்களிடம் தாய்வீடு இதழ் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டது. அவை அப்படியே உங்களுக்காக...**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன்



பாராளுமன்றத்தை நாம் ஒரு போர்க்களமாகவே இதுவரை பயன்படுத்தி வந்துள்ளோம் அந்த நிலை இனியும் தொடர வேண்டும். விடயங்கள் மெதுவாக நகர்வதை தென்னிலங்கை ஆளும் கட்சிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே நேரடியாகவும் தங்களது முகவர்களின் மூலமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளன. இதனை எமது மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். சரியான முறையில் வாக்கினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

**01. தமிழ் மக்களுக்கு தற்போதைய சூழ்நிலையில் இருக்கக் கூடிய குறுகிய மற்றும் நீண்டகாலப் பிரச்சினைகள் என்று நீங்கள் இனங்கண்டவை யாவை?**

தேர்தலில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளரும் தான் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகப் பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்பதையும் இனவொடுக்குமுறையின் பிடியில் இருப்பவர் என்பதையும், எனது சமூகத்தின் விடுதலையே எனக்கும் விடுதலை அளிக்கும் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அவர்களில் ஒருவராகச் செல்கிறேன் என்ற உணர்வு அவர்களிடம் இருக்க வேண்டும். இந்த உணர்வு இதயசுத்தியுடன் இருந்தால் மட்டுமே எமது விடுதலை சாத்தியமாகும்.

உண்மையான விசுவாசத்துடன், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான உண்மையான நிலையைக் கண்டறிதல், இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணையை வலியுறுத்தல், மீள்குடியேற்றத்தை முழுமைப்படுத்தல், மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், மீள்குடியேற்றக் கிராமங்களைச் சேர்ந்த விவசாயம், கடற்றொழில் உள்ளிட்ட வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்துதல் மீள்குடியேறிய மக்கள் அனைவருக்கும் வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவத்தை அகற்றி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதமளிக்க நடவடிக்கை எடுத்தல் போன்றவை உடனடிப்பிரச்சினைகளாக இனங்கண்டுள்ளோம்.

இலங்கை அரசினால் எமது மக்களின் ஆணையின்றி அபகரிக்கப்பட்ட நிலத்தை மீளப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, சர்வதேச உதவியுடன் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் ஐ.நாவால் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான நிலையான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ளல்.

**02. நீங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால் நீங்கள் இனங்கண்ட பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப் போகின்றீர்கள்?**

மேற்சொன்னவைகள் தனிமனிதனால் தீர்க்க முடியாதவை. ஒரு கூட்டு முயற்சியின் மூலமும் ஸ்திரமான அரசியல் கட்சியின் வழிகாட்டலில், மக்களின் பூரண பங்களிப்புடன் மட்டுமே மேற்கொள்ளக் கூடியவை. எனவே எதிர்வரும் தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை வலுப்படுத்த வேண்டும். அதனூடாக மட்டுமே ஒருமித்த குரலில் நாம் எமது பிரச்சினைகளை பாராளுமன்றத்திற்குள்ளேயும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் சர்வதேச மட்டத்திலும் காத்திரமாக எடுத்துச் செல்ல முடியும். பாராளுமன்ற ஜனநாயக முறையில் விடயங்கள் மெதுவாகவே நகரும். இருப்பினும் நாம் சோர்ந்து விடாமல் தொடர்ந்தும் போராட வேண்டும். பாராளுமன்றத்தையும் நாம் ஒரு போர்க்களமாகவே இதுவரை பயன்படுத்தி வந்துள்ளோம். அது தொடர வேண்டும்.

விடயங்கள் மெதுவாக நகர்வதை தென்னிலங்கை ஆளும் கட்சிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கிலேயே நேரடியாகவும் தங்களது முகவர்களின் மூலமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளன. இதனை எமது மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எமது மக்களின் வாக்களிப்பானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்டமைப்பாக உருவாக்குவதற்கும் வழிவகுக்க வேண்டும் என்பது எமது அவா.

முழுமையான அரசியல் கட்சி இல்லாது போனால் எமது இலக்கை அடைவதென்பது கடினமான காரியமாகிவிடும். ஆகவே எமது மக்கள் தவறாமல் வாக்களிப்பில் கலந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்க வேண்டும். கூட்டமைப்பைக் கட்டமைப்பாக, சட்ட வலுவுள்ளதாக உருவாக்கத் துடிப்பவர்களை ஆதரிக்க வேண்டும். எத்தகைய அச்சுறுத்தல்கள் வந்தாலும் போராட்டங்களை ஒழுங்கமைத்து வழிநடத்துபவர்களையும், மக்கள் பிரச்சினைகளுக்குத் தம்மால் இயன்ற வழிகளில் உழைப்பவர்களை இனங்கண்டு அவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். உடனடிப் பிரச்சினைகளுக்கும் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும் இதயசுத்தியோடு உழைப்பவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இங்கு ஒன்றைச் சுட்டிக்காட்டுதல் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் செல்வதென்பது மக்கள் தமக்குச் சேவை செய்வதற்கு எமக்கு வழங்கிய ஆணையே அன்றி, எமக்களிக்கப்பட்ட அதிகாரமல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து பணியாற்ற வேண்டும்.

**03. அரசியல் ரீதியில் தமிழர்கள் வெற்றி பெற வேண்டுமாக இருந்தால், தமிழர் பிரச்சினைகளை எந்தத் தளத்துக்கு எவ்வாறான பொறிமுறையின் கீழ் கொண்டு போக வேண்டும் எனக் கருதுகின்றீர்கள்?**

எமது இனத்தின் வெற்றி என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளின் வழிகாட்டலில், எமது மக்களின் பூரண பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுகின்ற உரிமைக் குரலுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதிலும், ஐ.நாவை தாமதமின்றி தலையீடு செய்ய வைப்பதிலும் தங்கியுள்ளது. உதாரணமாக இலங்கையில் நடைபெற்ற மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், காணாமற்போனோர், அரசியல் கைதிகளின் விடுதலை, காணி அபகரிப்பு போன்ற பிரச்சினைகளை தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வதுடன், உள்நாட்டு விசாரணைகள் வெறுமனே காலத்தைக் கடத்தும் செயற்பாடுகளே என்பதை வெளியுலகிற்கு தெரியப்படுத்தி, சர்வதேச சமூகத்தின் விசாரணையை வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறான அடக்கு முறைகளும் அச்சுறுத்தலும் தொடர்ந்தும் இடம்பெறாமல் இருக்க வேண்டுமென்றால் எமது பிரதேசத்தை நாமே ஆட்சி செய்கின்ற சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான ஓர் அரசியல் தீர்வு வேண்டும். அவ்வாறு எட்டப்படும் தீர்வானது யாராலும் மீளப் பெறமுடியாத வகையில், சர்வதேச சமூகத்தின் உத்தரவாதத்துடன் கிடைக்கப் பெற வேண்டும்.

கடந்த காலத்தில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களைக் கண்டறிந்து அவற்றிற்கு உரிய நடவடிக்கை எடுப்பதனூடாகவே நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய எமது அடுத்த கட்ட நகர்வு காத்திரமாக அமையும்.

**04. இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் தமது அதிகார வரம்பிற்குட்பட்ட அனைத்து விடயங்களையும் தமிழ் பேசும் மக்களுக்கு செய்திருக்கிறார்கள் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?**

நீங்கள் கேட்ட கேள்விக்கு நேரடியாக பதில் சொல்வது கடினமானது. எனது விடுதலை என்பது எனது இனத்தின் விடுதலையில் தங்கியிருப்பதால் நான் எனது இனத்துக்குச் செய்கின்ற நற்செயல்களே என்னையும் விடுவிக்கும் என்று நம்புபவன் நான். நான் எமது மக்களின் பிரதிநிதியாகவே செல்கின்றேன். நான் இதைச் செய்தேன் அதைச் செய்தேன் என்று மார் தட்டுவதால் யாருக்கு என்ன பயன்? எனது மக்களுக்கு எனது சமுதாயத்திற்கு எனது விடுதலைக்காக நான் செய்தவற்றைப் பட்டியலிடுவதால் யாருக்கு என்ன இலாபம்? எனது இனம் விடுதலை பெறவேண்டும்

என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். எமது மண்ணில் நாம் ஆட்சி செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றேன்.

எமது பிரதேசத்தின் தேவை கருதி அபிவிருத்திகளை நாமே மேற்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றேன். எமது மக்கள் எந்தவித அச்சமுமின்றி, நாமார்க்கும் அடிமையில்லை என்ற உணர்வுடன் நிம்மதியுடன் தத்தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். அதற்காக உழைப்பதற்குத் தயாராக இருக்கின்றேன். இதனை கடந்த முப்பது வருடங்களாக மெய்ப்பித்தும் வந்திருக்கின்றேன்.

மேலும், ஜனநாயக அரசியல் பாதையில் அனைத்துமே சற்று தாமதமாகவே நடைபெறும். உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் இது தான் நிலைமை. முன்னாள் ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையும் “இதுவரையில் இவ்வளவு தொகையான மக்கள் கண்ணீர் விட்டு அழுததை நான் எங்குமே கண்டதில்லை. நான் சந்தித்த பெண்களின் கண்ணீர் என்னை மிகவும் கவலைப்பட வைத்தது இருப்பினும் எமது நகர்வுகள் மெதுவானதாகவே இருக்கும்” என்று தெரிவித்திருந்தார்.

தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் முதலில் தானும் அடிமைப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன், எனது அடிமைத்தனம் விடுபட வேண்டுமானால் எமது மக்களின் அடிமைத்தனம் விடுபட வேண்டும் என்று நினைக்க வேண்டும். அதைவிடுத்து தான் மக்களிடமிருந்து அன்னியப்பட்டவராக எண்ணினால் அவரது வெற்றி எமது இனத்தின் விடுதலைக்கு எந்தவிதத்திலும் துணைபுரியாது. மேற்சொன்ன காரணங்களுக்காகத்தான் என்னை எமது மக்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் ஆதரவளித்து எம் இனத்துக்கு சேவையாற்றுமாறு உத்தரவிட்டிருந்தார்கள். இத்தேர்தலிலும் எனக்கு அந்த உத்தரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

---

**ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன்**

**கேள்வி: தமிழ் மக்களுக்கு தற்போதைய சூழ்நிலையில் இருக்கக் கூடிய குறுகிய மற்றும் நீண்டகாலப் பிரச்சினைகள் என்று நீங்கள் இனங்கண்டவை யாவை?**

பதில்: தமிழ் மக்கள் இந்த நாட்டில் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். அன்றாடப் பிரச்சினைகள் அடிப்படைப் பிரச்சினைகள் என இவற்றை இரண்டாக வகுக்கலாம். யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான மீள்குடியேற்றம், இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை இன்னமும் மீளப்பெற முடியாமை, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமற் போனோர் விவகாரம், யுத்தத்தில் விதவைகளாக்கப்பட்டோரின் விவகாரம், வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வருமானமின்மை, வேலையில்லாப் பிரச்சினை, வடக்கில் அதிகரித்துள்ள போதைவஸ்துப் பாவனை என்று பல அன்றாடப் பிரச்சினைகளை தமிழ் மக்கள் சந்தித்து வருகின்றனர்.

இதே போல் யுத்தத்திற்கு காரணமாக அமைந்த இனப்பிரச்சினையானது அடிப்படைப் பிரச்சினையாக காணப்படுகின்றது. தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் யுத்தத்திற்கு முடிவு கண்ட பின்னரும் அரசியல் தீர்வு இன்னும் காணப்படாமை வேதனைக்குரிய விடயமாகும்.

**கேள்வி: நீங்கள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால் நீங்கள் இனங்கண்ட பிரச்சினைகளை எவ்வாறு உங்கள் கட்சி மூலம் தீர்வுகாண முயல்வீர்கள்?**

பதில்: ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும். அந்த அரசாங்கத்தில் நாமும் பங்காளிகளாக மாறியிருப்போம். ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றது. 175 நாட்களே பதவியில் நீடித்த எமது அரசாங்கம் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கு முயற்சித்தது.

வலிகாமம் வடக்கில் இராணுவத்தினர் வசமிருந்த 1100 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் ஆரம்பகட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதேபோல் சம்பூர் பகுதியில் 880 ஏக்கர் பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் ஆரம்ப கட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. சட்டமா அதிபர் திணைக்களத்தில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு அரசியல் கைதிகளின் விடயம் குறித்து ஆராயப்பட்டது. இவ்வாறு ஆரம்ப கட்ட முயற்சிகள் எடுக்கப்பட்ட நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் மீண்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைத்ததும் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும். மீள்குடியேற்றமும் முழுமையாக நிறைவு பெறும். அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் நடவடிக்கை எடுக்கப்படும். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். புதிய அரசாங்கத்தில் 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அறிவித்து விட்டார். எனவே இதில் வடக்கிற்கு முன்னுரிமை அளிப்பதற்கான நடவடிக்கைகளில் நான் முன்னின்று செயற்படுவேன்.

காணாமற் போனோர் விவகாரமானது கடந்த அரசாங்க காலத்தில் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. அந்த விவகாரத்திற்கும் தீர்வு காணப்பட வேண்டும். இவ்வாறு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எமது அரசாங்கத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி:அரசியல் ரீதியில் தமிழர்கள் வெற்றிபெற வேண்டுமாகவிருந்தால் தமிழர் பிரச்சினைகளை எந்தத் தளத்திற்கு எவ்வாறான பொறிமுறையின் கீழ் கொண்டுபோக வேண்டும் என கருதுகின்றீர்கள்?**

பதில்:இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும். அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இடம்பெற்றால் அது வரவேற்கத்தக்கது. 2001 ஆம் ஆண்டு பதவிக்கு



வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுக்களை நடத்தியது. சமஷ்டியை உள்ளடக்கிய அதிகாரப் பகிர்வுக்கும் ஒஸ்லோ தீர்மானத்தின் மூலம் இணக்கம் காணப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த முயற்சி கைகூடவில்லை. ஆட்சி கவிழ்க்கப்பட்டதனால் இந்த நிலை ஏற்பட்டது. எனவே மீண்டும் எமது நிலையான ஆட்சி ஏற்பட்டதும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுகாண்பதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

**கேள்வி: இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் தமது அதிகார வரம்புக்குட்பட்ட அனைத்து விடயங்களையும் தமிழ் பேசும் மக்களுக்கு செய்திருக்கிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில்:இந்தக் கேள்விக்கு இல்லை என்றே பதிலளிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் பல்வேறு கோஷங்களை முன்வைத்து பதவிக்கு வரும் தமிழ் அரசியல் வாதிகள் திறந்த மனதுடன் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயல்வதில்லை. அடுத்த தேர்தலை இலக்கு வைத்தே பெரும்பாலானோரது செயற்பாடுகள் அமைகின்றன. இந்த இத்தகைய நடைமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும். 2010 ஆம் ஆண்டு தேர்தலில் குடாநாட்டு மக்களால் நான் தெரிவு செய்யப்பட்டேன். அன்று முதல் எதிர்க்கட்சியிலிருந்த போதிலும் மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்து வந்துள்ளேன். தற்போதைய 175 நாள் ஆட்சியிலும் என்னால் முடிந்தவரை மேற்கொண்டிருக்கிறேன். சகல தமிழ் அரசியல்வாதிகளும் சுயநல அரசியல் போக்கை கைவிட்டு பொது நலனில் அக்கறை செலுத்தினால் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காண முடியும்.



வரலாற்றுப் பெட்டகம்

# யாழ் கோட்டை வரலாறு



இலங்கையின் வடபுலத்தில் யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தவர்களால் எளிதில் மறக்க முடியாத ஒரு வரலாற்றுச் சுவடு. கோட்டையால் யாழ்ப்பாண மக்கள் சுமந்த வலிகளும் வேதனைகளும் ஏராளம். வடக்கின் வரலாற்று ஓட்டத்தை நோக்கினால் அந்த வரலாற்றை யாழ்ப்பாணக் கோட்டை தவிர்த்து குறிப்பிடவே முடியாது.

*1658* ஆம் ஆண்டு முதல் *1990* ஆம் ஆண்டு வரை மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆதிக்க சின்னமாக விளங்கிய யாழ்ப்பாணக் கோட்டையால் யாழ்ப்பாணத்தவர்கள் சுமந்த வலிகளும் இழப்புக்களும் ஏராளம்.

இலங்கை வடபகுதியில் சுதந்திரமான யாழ்ப்பாண இராச்சியம் காணப்பட்டது. இதன் கடைசி மன்னான தமிழ் மன்னன் சங்கிலிகுமாரன் செகராஜசேகரன் விளங்கினான். இவனது ஆட்சி *1619*ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை தலை நகராகக் கொண்டு விளங்கியது.

யாழ்ப்பாணம் இராச்சியம் ஐரோப்பியரின் வருகையால் வீழ்ச்சியடைந்தது.

தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்த போர்த்துகேயர் கி.பி *1543* ஆம் ஆண்டு முதலாவது படையெடுப்பை யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது மேற்கொண்டனர். அதில் தோல்வியடைந்தனர். அதனைத் தொடர்ந்து *1560*ஆம் ஆண்டு மற்றும் *1591* ஆம் ஆண்டுகளில் மீண்டும் போர்த்துகேயர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தனர்.

இந்த மூன்று படையெடுப்புக்களும் தமிழ் மன்னர்களால் முறியடிக்கப்பட்டன. இந்நிலையில் மீண்டும் போர்த்துக்கேயர் *1619* ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது போர்தொடுத்து யாழ்ப்பாணராச்சியத்தின் இறுதி மன்னன் சங்கிலியனை தோற்கடித்து தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர்.

போர்த்துகேயர்கள் ஆரம்பத்தில் நல்லூரை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருந்தாலும் நல்லூரில் சமதரையில் கிளர்ந்தெழும் தமிழர்களுக்கு மத்தியில் தங்கியிருப்பதில் உள்ள பாதுகாப்பின்மையை உணர்ந்து கொண்டு தமக்கு பாதுகாப்பான கோட்டையை அமைக்க தீர்மானித்தனர்.

இதற்கு வாய்ப்பாக போக்குவரத்துக்கு வசதியான கடல் நீரேரி அருகில் உள்ள கொழும்புத்துறை மற்றும் அலுப்பாந்தித்துறை பகைவர்களின் தாக்குதல்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய இடஅமைப்பு என அனைத்தும் பொருந்தியிருந்த இடமாக யாழ்ப்பாணத்தின் தென்கரையோரத்தை கோட்டை அமைப்பதற்கான இடமாக தெரிவு செய்து கொண்டனர்.

கோட்டையை அமைப்பதற்காக நல்லூர் பெரியகோவிலை இடித்து பெறப்பட்ட கற்களும் ஏனைய சைவ ஆலயங்களை இடித்து பெற்றுக்கொள்ளப்பட்ட கற்களும் வேலணை புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு போன்ற தீவுகளில் இருந்து பெறப்பட்ட முருகைக் கற்களும் காங்கேசன்துறையில் இருந்து பெறப்பட்ட கற்களும் கோட்டையை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டன.

போர்த்துக்கேயர் சதுரவடிவிலான கோட்டையை அமைத்து யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்தனர்.

இதன் பின்னர் *1658*ஆம் ஆண்டு ஒல்லாந்த படை யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டுக் கொண்டது. இதன் போது யாழ்ப்பாணக் கோட்டை சமர்க்களமாகியது. கோட்டைக்குள் பாதுகாப்பு தேடி பதுங்கியிருந்த போர்த்துக்கேயபடை பட்டினிச்சாவை எதிர் நோக்கியதினால் ஒல்லாந்த படையிடம் சரணடைந்தனர். யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில் ஒல்லாந்தர்களின் தண்டனைகள் மிகக்கொடூரமானவையாக அமைந்தன. இதற்கு கோட்டை தளமாக அமைந்தது. "எவர் ஆண்டால் என்ன" என்ற மனநிலைக்குள் யாழ்ப்பாண மக்கள் உட்பட்டனர்.

போர்த்துகேயரினால் சதுரவடிவமாக அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை பின்னர் ஒல்லாந்தரினால் ஐங்கோண வடிவக் கோட்டையாக மாற்றியமைக்கப்பட்டது.

இவ்வாறு ஒல்லாந்தரினால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை இரண்டு பிரதான வாயில்களைக் கொண்டது. கோட்டையின் தென் மதிற்சுவரில் நீர் வழி அமைக்கப்பட்டிருந்தது. கடல்நீரேரியூடாக பிரவேசிக்கும் ஒருவர் நீர்வழியூடாக காவலர்களின் அனுமதியுடன் கோட்டைக்குள் நுழைய முடியும்.

நிலவழியானது தொங்கு பாலத்தினால் இணைக்கப்பட்ட பிரதான வாயிற்புறமாகும். ஒல்லாந்தர் இத் தொங்குபாலத்தை உள்மதிலோடு தூக்கி இணைத்து பாதையை துண்டிக்கவும் தேவையான போது பாலத்தை இறக்கி இணைக்கவும் வசதிகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் தற்போது பாலம் நிரவப்பட்டு தரையாக்கப்பட்டுள்ளதை காண முடிகின்றது. உள் கோட்டையை சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் அகழி அழகும் பாதுகாப்பும் நிறைந்தது.

உயர் கொத்தளப்பகுதியில் அகழியின் அகலம் *132* அடிகளாகவும் மதிலின் நடுப்பகுதியில் இருந்து பார்க்கும் போது அகழியின் அகலம் *158* அடிகளாகவும் காணப்படுகின்றது.

*3960* அடிகள் நீளமான கோட்டையின் சுற்றுமதிலைச் சூழ *6400* அடிகள் நீளமான அகழியின் வெளிச்சாய் சுவர் அமைந்துள்ளது. அகழிவெளிமதில் சாய்சுவரோடு நான்கு தாழ் கொத்தளங்கள் அமைந்துள்ளன.

இந்த தாழ் கொத்தளங்கள் கோட்டை மதில் ஒவ்வொன்றினதும் நடுப்பகுதிக்கு எதிராக அகழிக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சின்னக்கோட்டை எனவும் அழைக்கப்படுகின்றன. முற்ற வெளியில் முனியப்பர் கோவிலுக்கு அருகில் இத்தகைய தாழ் கொத்தளங்கள் அமையப்



பெற்றுள்ளன. வடக்கில் வீரசிங்கமண்டபத்தை நோக்கியும் மேற்கில் பண்ணை பொலிஸ் விடுதியை நோக்கியும் சின்னக் கோட்டை எனப்படும் தாழ் கொத்தளங்கள் அமைந்துள்ளன. மற்றுமொரு தாழ் கொத்தளம் பிரதான வாயிலின் நுழைவுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. அவை முருகைக் கற்களால் கட்டப்பட்டு உட்புறத்தில் ஒடுங்கிய பாதைகளைக் கொண்டனவாகவும் மூடப்பட்ட கூரைகளைக் கொண்டனவாகவும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணக் கோட்டை ஐந்து கொத்தளங்களை கொண்டுள்ளது. கடல் நீரேரிப் பக்கமாக இரண்டு கொத்தளங்களையும் நிலப்புறமாக மூன்று கொத்தளங்களையும் கொண்டிருந்தது. இக் கொத்தளங்கள் ஐந்திற்கும் விசேடமாக பெயரிடப்பட்டிருந்தன. கோட்டையின் வடபுறக் கொத்தளம் உற்றெச் எனவும், வடகிழக்கு கொத்தளம் ஹெல்டர் லாந்து எனவும், தென்கிழக்குப்புறமாக அமைக்கப்பட்டுள்ள கொத்தளம் கொலன்ட் என்றும் தென்மேற்குப்புறக் கொத்தளம் சீலான்ட் என்றும் வடமேற்குப்புறக் கொத்தளம் கீறீஸ்லான்ட் என்றும் அழைக்கப்பட்டன. இந்த கொத்தளங்கள் ஐந்தும் நெடும் மதில்களினால் இணைக்கப்பட்டுள்ளன.

அகழி வெளிமதிற் சுவரின் மத்தியில் முற்ற வெளியோடு அமைந்த பாதுகாப்பற்ற தாழ் கொத்தளங்கள் முதலில் எதிரிகளின் வருகையை தடுக்கும் நிலைகளாக செயற்படும். தாழ் கொத்தளங்களால் எதிரிப்படையை தடுக்கமுடியாத பட்சத்தில் அடுத்தாற்போல் உயர் கொத்தளங்கள் செயற்படும். இவற்றின் மதில்களில் பத்தடிக்கு ஒரு பீரங்கி பொருத்தக்கூடிய இடைவெளி அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய கொத்தளங்களை இணைக்கும் அரண்சுவர்கள் அடித்தளத்தில் 40 அடிகள் அகலமானதாகவும் மேற்புறத்தில் 20 அடி அகலமாக ஒடுங்கி 30 அடிகள் வரை அகழி மட்டத்தில் இருந்து உயர்ந்து நின்றன. இவ் மதில்களின் நீளம் ஏறத்தாள 554 அடிகளாகவும் கொத்தளங்களின் சுற்றளவு தவிர்ந்த சுற்றுமதிலின் நீளம் 3960அடிகளாகவும் காணப்படுகின்றது.

62 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கோட்டையின் உள் பகுதியின் சுற்றளவு 6300 சதுரப்பரப்பாகவும் அமைந்துள்ளது. யாழ்ப்பாணக் கோட்டைக்குள் தேவாலயம், சிறைச்சாலை, ராணிமாளிகை, களஞ்சியசாலைகள், வைத்தியசாலை போன்றவை அமையப்பெற்றிருந்தன.

ஆனாலும் இவற்றின் இடிபாடுகளையே தற்போது காணமுடிகின்றது. கோட்டைக்குள் கோட்டையின் தென் கிழக்குப்பகுதியில் ஒல்லாந்தரால் சதுரங்க வடிவத் தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இத் தேவாலயம் குறீஸ்கேர்க் என அழைக்கப்பட்டது. சம அளவான பக்கங்களைக் கொண்ட கிரேக்க சிலுவை வடிவில் இது அமைக்கப்பட்டிருந்தது. பிரதான வாயில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தேவாலயம் பின்னர் உள்நாட்டு யுத்த காலப்பகுதியில் குண்டுத் தாக்குதல்களால் அழிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

தற்போது தகர்க்கப்பட்ட தேவாலயத்தின் இடிபாடுகள் நிறைந்த கற்களை மாத்திரமே கோட்டைக்குள் காண முடிகின்றது.

ஒல்லாந்தர் படை யாழ்ப்பாணக் கோட்டையை மையமாகக் கொண்டு ஆட்சி செய்து கொண்டிருக்கும் போது 1795 ஆம் ஆண்டு ஆங்கிலேயப்படையினர் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டனர். இதன் போது ஒல்லாந்தர் படை யுத்தமின்றி கோட்டையைக் கையளித்து வெளியேறினர்.

ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணக் கோட்டை வரி சேகரிப்புக்கான நிர்வாக மையமாக மாற்றம் பெற்றது.

ஆங்கிலேயர் காலத்தில் கோட்டை பாரிய மாற்றங்களுக்கு உட்படவில்லை.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கோட்டைக்குள் இருந்த ராணிமாளிகை சுப்ரீம் கோட் நீதிபதிகளினதும் அரசாங்க அமைச்சர்களினதும் தங்குமிடமாக விளங்கியது. அத்துடன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற உயர்அதிகாரிகளும் ராணி மாளிகையில் தங்கிச் சென்றுள்ளனர். உள்நாட்டு யுத்தம் காரணமாக யாழ்ப்பாண கோட்டைப் பகுதியில் நடந்த தாக்குதல்களால் சிதைவடைந்த நிலையிலேயே ராணிமாளிகையின் தோற்றம் தற்போது காணப்படுகின்றது.

கோட்டைக்குள் அமைக்கப்பட்டிருந்த ஆயுத களஞ்சியசாலைகளில் தற்போது மூன்று ஆயுத களஞ்சிய சாலைகள் மாத்திரமே எஞ்சியுள்ளன. கோட்டைக்குள் சிறைச்சாலை அமைக்கப்பட்டிருந்தாலும் தற்போது அதன் அத்திவாரத்தை மாத்திரமே காணமுடிகின்றது.

தூக்கு மேடை என அடையாளப்படுத்தப்பட்ட இந்தப் பகுதி இராணுவ வீரர்களுக்கான ஆயத்த மணி அமைந்திருந்த கோபுரம் என கண்டறியப்பட்டுள்ளது. ஆனாலும் இதனை தூக்கு மேடையாகவே தற்போது பலரும் கருதி வருகின்றனர்.

1948 ஆம் அண்டு ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது. இந் நிலையில் யாழ்ப்பாணக்கோட்டையை ஆங்கிலேயர் இலங்கை இராணுவத்தினரிடம் கையளித்து விட்டு வெளியேறினர்.

இதன் பின்னர் யாழ்ப்பாணக் கோட்டை சிறைச்சாலைக் கூடமாகவும் பொலிஸ் நிலையமாகவும் மாற்றம் பெற்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அன்னியரின் ஆதிக்கத்தில் சமர்களமாக இருந்த யாழ்ப்பாணக் கோட்டைப்பகுதி சுதந்திரத்தின் பின் அமைதி கண்டது.

ஆனால், 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி மீண்டும் கோட்டை சமர்களமாகியது. சுதந்திரத்துக்குப்பின்னர் இலங்கையின் முதலாளித்துவ ஆட்சியை வீழ்த்தி மக்களாட்சியை ஏற்படுத்துவதற்கு முயன்ற ஜே.வி.பி இயக்கக் குழுவினர் நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களை தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையமும் யாழ் கோட்டைப் பகுதியும் தாக்குதல்களுக்கு உள்ளானது. இந்த தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்ட முக்கியஸ்தர்களை கைது செய்த பொலிஸார் அவர்களை ஊர்காவற்துறை கோட்டையில் சிறைவைத்தனர்.

இதன் பின்னர் 1972 ஆம் ஆண்டு கோட்டையின் ராணிமாளிகை பொலிஸாரின் விசாரணைத் தளமாகவும் சிறைக்கூடமாகவும் மாற்றம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கோட்டை 1983 ஆம் ஆண்டு மீண்டும் சமர்க்களமாகியது.

இராணுவத்தினரின் முகாமாக விளங்கிய யாழ் கோட்டை 1984ம் ஆண்டு ஈழத்தமிழ் போராளிக் குழுக்களால் முற்றுகைக்குள்ளானது. விடுதலைப் போராட்ட இயக்க குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த முற்றுகை யாழ்ப்பாண கோட்டை வரலாற்றில் மிக நீண்ட கால முற்றுகையாக குறிப்பிடப்படுகிறது. மூன்று ஆண்டுகள் 23 நாட்கள் இந்த முற்றுகை தொடர்ந்தது.

கோட்டைக்குள் இருந்து வெளியேற முடியாத இராணுவத்தினர் தொடர் ஷெல் தாக்குதல்களையும் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஆட்லறி தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

இந்த காலப்பகுதியில் இடம் பெற்ற கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களினால் யாழ்ப்பாணத்து மக்கள் உயிர் சேதங்களையும் உடமைச் சேதங்களையும் எதிர்கொண்டனர்.

இந்நிலையில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இந்திய அமைதிப் படையினர் யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசித்தனர். கோட்டையை தொடர் முற்றுகைக்குள் வைத்திருந்த விடுதலைப்புலிகளின் அனுமதியுடன் 1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்திய இராணுவம் கோட்டைக்குள் நுழைந்தது.

1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி முதல் யாழ்ப்பாணக் கோட்டை இந்திய இராணுவத்தினரின் முகாமாகியது.

பின்னர் இந்திய இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் வெடித்தன. 1987 ஆம் அண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி கோட்டை இராணுவ முகாமில் இருந்து இந்திய அமைதிப்படையினர் நகருக்குள் பிரவேசிக்க முயன்ற போது விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டனர். அதன் பின்னர் இந்திய இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல்களை கோட்டையிலிருந்து மேற்கொண்டனர். இதன் போது யாழ்ப்பாண வைத்திய சாலை மீது நடாத்தப்பட்ட பீரங்கித்தாக்குதல் மற்றும் வைத்தியசாலைக்குள் புகுந்து இந்திய இராணுவம் நடத்திய தாக்குதல்களில் பணியாளர்கள் நோயாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணக் கோட்டை மீண்டும் சமர்களமாகி நீண்டு சென்றது.

1989ம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் இலங்கையிலிருந்து வெளியேறினர். மீண்டும் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் யாழ்ப்பாணக் கோட்டை வந்தது.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி கோட்டை மீண்டும் விடுதலைப்புலிகளால் முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டதால் சமர்க்களமாகி நீண்டு சென்றது.

1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளால் கோட்டையை கைப்பற்றுவதற்கான இறுதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது இலங்கை இராணுவத்தினர் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்டிருந்த நீர்வழியூடாக மண்டதீவு நோக்கி பின்வாங்கிச் செல்ல 1990 அம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணக் கோட்டை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

1990ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணக் கோட்டை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

இதன் போது "நான்கு நூற்றாண்டு காலமாக தமிழர்களை அடிமைத்தனத்துக்குள் ஆட்படுத்திய ஆதிக்கச் சின்னம் தமிழர் பிரதேசத்துக்கு தேவை அற்றது" என்று கருதிய விடுதலைப்புலிகள் கோட்டையை இடிக்கத்தீர்மானித்தனர். கோட்டையின் பெரும் பகுதி இடித்தழிக்கப்பட்டது.

பின்னர் 1995ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் யாழப்பாணம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதன் போது யாழ்ப்பாணக் கோட்டையும் இலங்கை இராணுவத்தினரின் வசமாகியது.

இதன் பின்னரும் சமர்களுக்கான களமாக யாழ்ப்பாணக் கோட்டை விளங்கியது.

2009ஆம் ஆண்டு இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது யாழ்ப்பாணக் கோட்டை தனது "சமர்களம்" என்ற முகத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.

இதன்பின்னர் யாழ்ப்பாணக்கோட்டை மரவுரிமைச்சின்னம் மற்றும் கலாச்சாரபொக்கிஷம் என்ற தொனிப் பொருளில் பார்க்கப்பட்டது.

இதனை தொடர்ந்து யாழ்ப்பாணக் கோட்டையை புனரமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் புனரமைப்பு பணிகள் ஆரம்பமாகின..

நான்கு நூற்றாண்டுகள் சமர்களின் தளமாக விளங்கிய கோட்டை தற்போது சுற்றுலாத் தலமாக மாற்றம் கண்டுள்ளது.

ஆதிக்கச் சின்னமாக விளங்கிய யாழ்ப்பாணக் கோட்டை சுற்றுலாத்தலமாக மாற்றம் கண்டமை யாழ்ப்பாணத்தவர்கள் மனதில் ஒருவித நிம்மதியை உருவாக்கியுள்ளது. பேரழிவுகளை தந்த சமர்களின் தளம் இனிவரும் காலத்தில் சுற்றுலாத்தலமாக மகிழ்வு தரும் என்று நம்பலாம்



# சம்பள போராட்டம் சந்தியிலே... “வெல்லட்டும் தொழிலாளர்கள்”

அருட்தந்தை மா.சத்திவேல்

தேயிலை மலையிலே ஒரு போராட்டம் பூத்துள்ளது. இதற்காக மலையகத்தின் அரசியல்வாதிகள் நகர்வீதியிலும் சந்தியிலும் கடைவிரித்துள்ளனர். இது கண்ணைக் கவருமா? கண்களைத் திறக்குமா? தென்றலாய் பாரா ளு மன்றம் வரை செல்லுமா? ஆடிக்காற்றிலே அலைக்கழிக்கப்படுமா? இதுவே பலரதும் கேள்வியாகும்.

சட்டப்படி வேலை செய்வதென்பதும், மெதுவாக வேலை செய்வதென்பதும் தொழிலாள வர்க்க போராட்டத்தின் இன்னுமொரு வடிவமே. இதனை பெருந்தோட்டக் கம்பனிகளால் புரிந்துக் கொள்ள முடியவில்லையா? ஏற்றுக் கொள்ளமுடியவில்லையா? போராட்டத்தை நசுக்கிட பல தொழிற்சாலைகளை பூட்டி வைத்துள்ளனர். கொய்த கொழுந்துகளை பெற்றுக்கொள்வாரின்றி வெளியிலே கொட்டப்பட்டன. காரியாலயமொன்று தாக்குதலுக்குள்ளாகிய தாகவும் செய்திகள் வெளிவருகின்றன. இத்தகைய செயற்பாடுகள் போராட்டத்தை வேறு திசையில் திருப்பி விடுவதோடு எதிர்பாராத பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்திவிடலாம் என்பதனையும் உரியவர்கள் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

இவ்வருடம் ஜனவரி மாதம் பதவியேற்ற புதிய அரசு தமது ஆயுட்காலத்தை நிறைவு செய்து, புதிய தேர்தலுக்கு நாள் குறித்துள்ள நிலையில் தொழிலாளர்களின் வியர்வைக்கான பெறுமதி தேர்தல் கால விளம்பரங்களுக்கு விலை பேசப்படும் நிலையை தோற்றுவித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு ரூபா 2500 - 10,000 வரை சம்பள அதிகரிப்பு செய்ததோடு தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிற நிலையில் ஓய்வூதியக் காரர்களுக்கான கொடுப்பனவு எதிர்வரும் மாதத்தில் இருந்து அதிகரிக்கப்படுமென பிரதமர் அறிவித்துள்ளார். ஆனால் மலையகத் தொழிலாளர்களின் ஊதிய அதிகரிப்பு தொடர்பாக எந்த விதமான அறிக்கையினையும் விடாதிருப்பது, பிரதமரை சந்தேகத்தோடு பார்க்கத் தூண்டுகின்றது.

ஜனவரியில் பதவியேற்ற அரசு தனியார் துறையினரும் ரூபா 2500 அதிகரிப்பு செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டது, இது முழுமையாக நிறைவேறியதோ இல்லையோ ஒரு சில தனியார்துறை நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கான கொடுப்பனவை சில நூறு ரூபாய்களால் அதிகரிப்பு செய்துள்ளனர். அது மாத்திரமன்றி அன்றாட கூலிகளாக உழைப்போரும் தமக்கான கூலியை சுயமாகவே அதிகரித்துக் கொண்டனர். இவ்வாறான ஒரு கூலித் தொழிலாளி நாளொன்றுக்கு ரூபா 800 முதல் ரூபா 1200 வரை அதிகரித்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள ஒப்பந்த விடயம், ஒப்பந்த திகதியைக் கடந்து மூன்று மாதங்கள் கடந்தும் தீர்க்கப்படாதிருப்பதோடு தொழிலாளர்களையும் அவர்களது வாழ்வையும், தொழிலையும் பாதிப்புக்குள்ளாக்கி நீள்கின்றது.

இந்நிலையிலும் அரசின் பாராமுகத் தன்மை தொழிலாளர்களின் வாழ்வுப் பிரச்சினைகளில் அக்கறையின்மை ஆட்சியாளர்களோடு இணைந்திருக்கும் மலையக் கட்சிகளின் செயற்பாடு ஆதிக்க தான்தோன்றித்தனம் மலையக மக்களை குறிப்பாக உழைக்கும் மக்களை சிந்திக்க வைக்கின்றது.

இரண்டு வருடத்திற்கொரு முறை சம்பள மற்றும் நலவிடயங்கள் தொடர்பில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் ஒப்பந்த உள்ளடக்க விடயங்கள் தொடர்பாக தொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்துவதுமில்லை. அக்கறை காட்டுவதுமில்லை. மாதாந்த சந்தாக்களை அறவிடுவதற்கு எடுக்கின்ற முயற்சி அக்கறை இவ்விடயத்தில் இல்லாதிருப்பது ஏன்?

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களும் இவ்விடயத்தில் அமைதி காக்கின்றன. ஆனால் சந்தா பணத்தினை தவறாது பெற்றுக் கொள்கின்றன. தொழிற்



சங்கங்களுக்கும், கம்பனிகளுக்கு இடையிலே இரகசிய தொடர்பேதும் உண்டோ? எனவும் சிந்திக்கத் தோன்றுகின்றது. மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களும் கம்பனிகளும் ஒப்பந்தம் என்ற போர்வையில் கொடுக்கும் எதனையும் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் என்ன அடிமைகளா?

மேலும் பெருந்தோட்ட பிரதேசங்களில் குடியிருப்புக்கள், வாழ்விடம், குடிநீர், மலசலகூடம், பாதைகள், பள்ளிக்கூடங்கள், மின்சாரம், போக்குவரத்து வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகள் இந்த நூற்றாண்டிலும் நிறைவேற்றப்படாத நிலை தொடர்கின்றது.

இந்த நாட்டில் வாழும் இன்னுமொரு மக்கள் பிரிவாகவோ சமத்துவமிக்க பிரஜைகளாகவோ அங்கீகரிக்கப்படாத வாழ்விழந்த நிலையும் தொடர்கின்றது இவற்றுக்கெல்லாம் சுயமாகவே மலையகம் தழுவிய அல்லது பெருந்தோட்டங்கள் தழுவிய போராட்டங்களை முன்நகர்த்த முடியாத அளவிற்கு சிந்தனைகள் மழுங்கடிக்கப்பட்டுள்ளன.

தலைவர்கள் நினைத்தால் மட்டுமே போராட்டம். அதுவும் தலைவர்கள் தமது சக்தியை வெளிப்படுத்துவதற்கு தொழிலாளர்களை போராட்டத்தில் குதிக்கச் செய்கின்றனர். இவ்வாறான போராட்டங்களும் ஆங்காங்கே தனித்தனியே நடக்கின்றன. இந்நிலைக்கு காரணம் பெருந்தோட்டத் தொழிலாளர்களே தமது அடிமை நிலையாக ஒரு சில தலைமை சக்திகள் நினைக்கின்றதேயாகும்.

இன்று சந்தியிலே சம்மணம் போட்டு அமர்ந்திருக்கின்ற தொழிற்சங்கம் ரூபா 1000 தொடர்பில் உடன் தொழிற்சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடாத்தி ஒப்பந்த மேசையிலே ஏகோபித்த கோரிக்கையாக முன்வைக்க நினைக்காதது ஏன்? தான்தோன்றித்தனமாக ரூபா 1000 பெற்றுக் கொடுப்போம் என மலைமுகடுகளிலே எதிரொலிக்கச் செய்து தொழிலாளர்களை வீதிக்கு இழுத்து வந்தது ஏன்? ஏனைய தொழிற்சங்கங்களும் அவர்களின் தொழிற்சங்க உறுப்பினர்களும் தமக்கே அடிமை எனும் நினைப்பா? அல்லது நானே தனிக்காட்டு ராஜா எனும் தடிப்பா?

இறுதியாக நடந்த பேச்சு வார்த்தையின் போது ஒரு தொழிற்சங்கம் தான் மட்டும் வெளிநடப்புச் செய்து ஏனைய தொழிற்சங்கங்களை அந்தரத்தில் விட்டது ஏன்? இதனால் தான் எத்தகைய திகதி தீர்மானமும் இன்றி கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

இன்று ஒரு தொழிற்சங்கம் மெதுவாக வேலை செய்யும் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்க வேறு தொழிற்சங்கம் தனித்து வீதியிலே நின்று போராட இன்னும் சில தொழிற்சங்கங்கள் வேடிக்கை பார்க்கின்ற காட்சி மலையக மெங்கும் விரிந்துள்ளது.

இன்றைய உழைக்கும் வர்க்கம் இன ரீதியாக, கட்சிரீதியாக, பிரதேசரீதியாக பல்வேறு நிறங்களில் பிளவுப்பட்டுள்ளது. இவ்வாறான பிரிவுகளை திட்டமிட்டு உருவா க்கி பாதுகாப்போர் முதலாளித்துவ உணவு மேசையிலே சமபந்தி விருந்தில் மகிழ்கின்றனர். இவர்களின் சுகபோகத்திற்காக உழைக்கும் மக்களே பிரித்துள்ளதால் ஒன்றித்த போராட்டமோ, குரலோ எழ முடியாது தடுக்கப்பட்டுள்ளது.

மலையக பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கும், வெளியில் இருக்கின்ற உழைக்கும் சக்திகளுக்கும் இடையிலான உறவையும் துண்டித்துள்ளனர். இதனால் மலையத்திற்குள் நடக்கும் எந்தவொரு போராட் டத்திற்கும் வெளியிலான ஆதரவு போராட்டம் நிகழ்வதில்லை. அதே போன்று மலையகத்திற்கு வெளியே நடக்கும் எந்தவொரு போராட்டம் தொடர்பாகவும் தொழிலாளர்கள் அறிவுறுத்தப்

படுவதுமில்லை அவர்களை இணைய விடுவது மில்லை.

இதற்கு பெருந்தோட்ட தொழிலாளர் சமூகம் ஒரு சில தொழிற்சங்கங்களின் ஆதிக்கங்களின் கீழ் இருப்பதும் அவர்களின் சர்வாதிகார போக்கும் காரணமாயிருப்பதோடு தொழிற்சங்கங்களும் அதன் சார்பு கட்சிகளும் அரச சார்பு கட்சிகளோடு இணைந்திருப்பதும் அமைச்சுப் பதவிகளை அலங்கரிப்பதுமாகும். தமது பதவிகளுக்காக மலையகத்திற்கு வெளியே இருக்கின்ற தொழிலாளர் அமைப்புக்களுடனான உறவை வேண்டுமென்றே துண்டித்து வைத்துள்ளனர். இதுவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை அடிமைகளாக வைத்திருப்பதன் இன்னுமொரு வடிவமாகும்.

தொழிற்சங்கங்களே, தொழிற்சங்க சார்பு கட்சிகளே உங்கள் தேர்தல் வியாபாரத்திற்காக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வயிற்றுப் பசியை உங்கள் சந்தையிலே விற்பனைக்கு விடாதீர். தொழிலாளர்களின் பிரச்சினை என்பது தொழில் சார்ந்தது மட்டுமல்ல அது நிலம் சார்ந்தது, அதனோடு ஒட்டிய அரசியல் உரிமை சார்ந்தது. மலையக தேசியத்தின் பாதுகாப்பு சார்ந்தது. மலையகத் தலைவர்களுக்கு மலையகத் தேசியம் தொடர்பான சிந்தனை இன்மை மலையகத்தையே பாதாளத்தில் தள்ளியுள்ளது. தற்போது அரசியல் கட்சிகள் தமது வாக்கு வங்கியை அடைகாக்கவே தொழிற்சங்கங்களை பாவிக்கின்றன, பாதுகாக்கின்றன, வளர்க்கின்றன.

சம்பள பிரச்சனை என்பது பொதுத் தேர்தலை அண்மித்ததும் அல்லது பொது தேர்தல் முடிந்ததும் ஏதோ ஒரு வகையில் முடிவிற்கு வந்துவிடும். அதனுடைய வெற்றியும் பாராளுமன்றத்திலே எதிரொலிக்கும். பதவிகளும் சலுகைகளும் வெற்றியாளர்களுக்கு கிடைக்கும். ஆனால் தொழிலாளர்களுடைய பிரச்சினை தொடர்ந்திருக்கும்.

பெருந்தோட்டங்கள் நட்டமாயினும் சம்பள அதிகரிப்பு செய்ய முடியாதாயினும் கம்பனிகள் ஏன் நட்டமடையும் தோட்டங்களை கட்டி ஆள்கின்றன. ஆதாயமின்றி காசை அள்ளி இறைக்க மாட்டார்கள். ஆதலால் கம்பனிகளே நட்டமடையும் பெருந்தோட்டங்களை விட்ட வெளியேறுங்கள் என தொழிற்சங்கங்கள் குரல் எழுப்பும் நாள் என்று வரும் அதற்கான மக்கள் சக்தியை அறிவூட்டாதது ஏன்? போராட்டங்களை முன்னெடுக்க முடியாதது ஏன்? அத்தகைய ஒரு பேச்சு வார்த்தையை முன் எடுப்பதற்கு தாம் சார்ந்திருக்கின்ற அரசை நாடாதது ஏன்?

இன்று சிறு தோட்ட உரிமையாளர்களே, தேயிலை உற்பத்தியில் இலாபத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். சிறு தோட்ட உரிமையாளர்களும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகின்றனர். அவர்களுடைய பொருளாதாரமும் முன்னேற்றகரமான பாதையிலே முன்நகர்கின்றது. அவர்களுடைய வாழ்வு பிரதேசங்கள் அபிவிருத்தி காண்கின்றன. நாட்டின் அரசியலிலே நேரடியாக பங்கேற்று உரிமைகளுக்காக குரல் எழுப்புகின்றனர்.

மலையக மக்களும் குறிப்பாக பெருந்தோட்டத் தொழிலாளர்களும் ஏகபோக தொழிற்சங்கங்களின் பிடியில் இருந்தும் அவர்களின் கட்சிசார் போதைகளிலிருந்தும் விடுபட்டால் மட்டுமே முழுமையான விடுதலை ஒளியைக் காண முடியும்.

சமூக நிறுவனங்களும், சமூக அமைப்புக்களும் தமது செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் நாளிலே தொழிற்சங்கங்களும் அதன் சார்பு கட்சிகளும் கண் விழிக்கும். இல்லையெனில் மலையகத்தின் வாழ்வு பிரச்சினை என்பது அரசியல்வாதிகளின் பதவி மோகத்திற்கான தங்க வாத்தாகவே அவர்களால் பாதுகாக்கப் படும்.

# தமிழினத்திற்கு சுதந்திர வாழ்வு வேண்டுமெனின் தமிழினம் தன்னை ஆள வேண்டும்!

**வைத்தியகலாநிதி சி.சிவமோகன் சாட்டை**

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனிஞ்சியன்குளம் பிரதேசத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சார அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றிய வைத்திய கலாநிதி சி.சிவமோகன்,

பிரித்தானிய ஏகாதிபத்தியம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இலங்கை சுதந்திரமடைந்த போது தமிழினம் தலைநிமிர்ந்து நின்றது. அன்றைய அடிமை சாசனமாகிய இலங்கை அரசியல் யாப்பை அன்றிருந்த எமது தலைமைகள் புரிந்து கொள்ள தவறிவிட்டன. அதன் விளைவுகளை பல தமிழினப் படுகொலைகளாக நாம் பார்த்திருக்கிறோம்






1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் எமது மக்கள் கொல்லப்பட்டனர். அவர்களது பொருளாதார வளம் அன்று பாதுகாப்பு படையினரின் கண்களின் முன்னே சூறையாடப்பட்டது. எந்தவொரு பாதுகாப்பையும் அன்று இலங்கையின் அரசியல் அடிமை சாசனம் எமக்கு தந்து விடவில்லை.

எனவே, தமிழினத்திற்கு சுதந்திர வாழ்வு வேண்டுமெனின் தமிழினம் தன்னை ஆளவேண்டும்.ா இலங்கை அரசியல் சட்டத்தை இன்று பாதுகாப்பு படையினர் தமது வசதிகளுக்கு ஏற்றவாறு வளைத்து எமது தமிழ் மக்களின் மீது ஏவி விடுகிறார்கள். எனவே எம் மக்களை நேசிக்காது அந்நியப் படைகள் என்றும் எமக்கு பாதுகாப்பாக இருக்கப் போவதில்லை என தெரிவித்தார்.



சினிமா

# பாகுபலி
# வசூல் ரகசியம்

இந்த ஆண்டு முழுவதும் பேசினாலும் தீராத பிரமிப்புத்தான் "பாகுபலி" எஸ்.எஸ்.ராஜ மவுலியின் இயக்கத்தில் பிரமாண்டமான திரைப்படம் கடந்த வெள்ளியன்று ரிலீஸாகி இந்தியாவிலேயே முதல் மூன்று நாட்களில் அதிக வசூல் செய்த சாதனைப்படம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

இந்த படத்தின் பிரமாண்டம், பிரபாஸின் அற்புதமான நடிப்பு, கமராவின் மாயா ஜாலம், தமன்னாவின் அழகு, பிரமிப்பூட்டும் பின்னணி இசை, கிராபிக்ஸ் காட்சிகளின் அற்புதம் ஆகிய பல பொசிட்டிவ் கருத்துக்கள்




தொகுப்பு - கபில்ராஜ்

இந்தப் படம் குறித்து பேசப்பட்டு வந்தாலும், படத்தின் முடிவு இடைவேளையில் வரும் எதிர்பார்ப்பு காட்சி போல இருப்பதாகவும், சத்யராஜ் பேசும் ஒரு முக்கிய வசனத்துடன் படம் முடிவடைவது ஒரு முற்றுபெறாத படமாக இருப்பதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளது. குறிப்பாக ஆந்திராவில் உள்ள பிரபாஸ் ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

படக்குழுவினருடன் ஆலோசனை செய்த இயக்குனர் எஸ்.எஸ். ராஜமௌலி, அடுத்த பாகத்தில் இடம்பெறக் கூடிய ஒருசில முக்கிய காட்சிகளை முன்னோட்டம் போன்று ஒரு முன்னோட்டத்தை காண்பிக்க முடிவு செய்துள்ளதாகவும், இந்தக் காட்சிகளை அனைத்து திரையரங்குகளிலும் இணைக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

தமிழ் சினிமா ரசிகர்களுக்கு மன்னர் காலத்து கதை என்பது ஒரு புதுமையான விஷயம் இல்லை. எம்.ஜி.ஆர்., சிவாஜி காலத்தில் இருந்தே சரித்திரக் கதை திரைப்படங்களை பார்த்து பழகியவர்கள் நாம். ஆனால் ஒரு சரித்திர திரைப்படம் மிகப்பெரிய பட்ஜெட்டில் தயாராகியிருப்பது தமிழ் திரையுலகில் மட்டுமின்றி இந்திய திரையுலகிலேயே இதுதான் முதல்முறை. அதுமட்டுமின்றி சரித்திரக் கதையை நவீன தொழில்நுட்பங்களுடனும், ஏராளமான தொழில்நுட்பக் காட்சிகளுடனும் ராஜமௌலி. ரூ.250 கோடி செலவில் பிரமாண்டமாக இயக்கியுள்ளார். இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய 4 மொழிகளிலும் திரையிடப்பட்டுள்ளது.

"ஈ"யை வைத்தே இமாலய திரைப்படம் எடுத்தவர் இயக்குனர் எஸ்.எஸ்.ராஜமவுலி. அப்படியிருக்கும் போது பிரபாஸ், அனுஷ்கா, ராணா, தமன்னா, நாசர், சத்யராஜ் போன்ற இமாலய நடிகர்களுடன் சேர்ந்தால் சும்மா இருப்பாரா? டிரைலரை பார்க்கும்போதே பிரமிப்பாக இருந்தது . தமிழ் சினிமா ரசிகர்கள் "ஐ" படத்தின் முன்னோட்டத்துக்கு பின்னர் அதிகளவு ஆச்சரியப்பட்டது பாகுபலி" படத்தின் முன்னோட்டம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

நமக்குத் தெரிந்த வரையில் சரித்திரப் படம் என்றாலே மூன்று மணி நேரத்திற்கும் மேல் ஓடும் நீளமான படமாகத்தான் இருக்கும். ராஜ ராஜ சோழன், நாடோடி மன்னன் காலத்தில் இருந்து பொலிவூட்டில் வெளிவந்த ஜோதா அக்பர் திரைப்படம் வரை 3 மணி நேரத்திற்கும் மேல்தான் அனைத்து படங்களும் இருந்தன. ஆனால் இந்த படம் 2 மணி நேரம் 38 நிமிடங்கள் மட்டுமே இருப்பதால் மக்கள் சென்று படத்தின் பிரமாண்டத்தை காண ஆவலாகச் செல்கின்றனர்.

எஸ்.எஸ்.ராஜமௌலி கடந்த 2001ஆம் ஆண்டில் இருந்து பல திரைப்படங்கள் இயக்கியிருந்தாலும், தமிழ் ரசிகர்களுக்கு அவரை மாவீரன், நான் ஈ படங்களின் மூலம்தான் நன்கு அறிந்தார்கள். அதன் பின்னர் வெளியாகியிருக்கும் இந்த "பாகுபலி" கண்டிப்பாக முந்தைய இரண்டு படங்களை விட மாபெரும் வெற்றியை தமிழக ரசிகர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்த படத்தில் பணியாற்றிய இயக்குனர் உட்பட மொத்தம் 25 பேர் தேசிய விருது பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் படத்தின் ஒவ்வொரு துறையும் நுணுக்கமாக கையாளப்பட்டிருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை

இந்த படத்தின் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ள பிரபாஸ், அனுஷ்கா, ராணா, தமன்னா, நாசர், சத்யராஜ் ஆகியோர் தென்னிந்தியா முழுவதும் பிரபலம் என்பதால் இயக்குனர் தைரியமாக மூன்று தென்னிந்திய மொழிகளிலும், இந்தியிலும் வெளியிட்டுள்ளார். இந்திய திரையுலகை உலகமே திரும்பி பார்க்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த பிரமாண் டமான திரைப்படம் அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது .

இத் திரைப்படத்தின் வசூல் விபரங்கள் இந்திய சினிமாவை வாய் பிளக்க வைத்துள்ளது. .எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கத்தில் வெளியான "பாகுபலி" திரைப்படம் வெளியான நாளிலிருந்தே மாபெரும் வரவேற்பைப் பெற்று வசூலை அள்ளி வருகிறது.

இப்படம் உலகம் முழுவதும் 4 ஆயிரம் தியேட்டர்களில் திரையிடப்பட்டன. தமிழகம் முழுவதும் 500 தியேட்டர்களில் வெளியானது. படம் வெளியான முதல் நாளிலேயே ரூ.76 கோடி (இந்திய ரூபாய்கள்) வசூலித்தது. ஐந்து நாட்களில் ரூ.215 கோடி வசூலித்து சாதனை படைத்துள்ளது.

இது குறித்து பேசிய வர்த்தக ஆய்வாளர் த்ரிநாத், "குறைந்த நாட்களில் 200 கோடி ரூபாய் வசூலை பெற்ற இந்தியப் படம் என்ற சாதனையை பாகுபலி படைத்துள்ளது. ஐந்தே நாட்களில் ரூ.215 கோடியை பாகுபலி பெற்றுள்ளது. வார நாட்களிலும் வசூலில் பெரிய வீழ்ச்சி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது" என்றார்.

வெளிநாடுகளிலும் "பாகுபலி" சிறந்த வரவேற்பைப் பெற்று, "ஹாப்பி நியூ இயர்", "பீகே" ஆகிய திரைப்படங்கள் பெற்ற வெளிநாட்டு வசூல் சாதனையை முறியடித்துள்ளதுமை குறிப்பிடத்தக்கது

இந்தியாவிலேயே மிகப் பெரிய பட்ஜெட் திரைப்படம், பிரமாண்டத்தின்

உச்சம், எஸ்.எஸ்.ராஜமௌலியின் கனவுப்படம், என ரிலீசுக்கு முன்னர் விமர்சிக்கப்பட்ட பாகுபலி, உண்மையிலேயே பிரமாண்டம் தானா, அப்படி என்னதான் இந்த பாகுபலியில் சுவாரஸ்யம் என்பதை தற்போது பார்ப்போம்.

கையில் குழந்தையுடன் அருவியின் பேரிரைச்சல் முன் முதுகில் அம்புடன் நிற்கும் ரம்யாகிருஷ்ணன் தோன்றும் முதல் காட்சியிலேயே ஆடியன்ஸ் சீட் நுனிக்கு சென்றுவிடுகின்றனர். அதன்பின்னர் தன்னுடைய உயிரை கொடுத்து குழந்தையை காப்பாற்றும் அளவுக்கு அந்த குழந்தை யார்? என்பதுதான் கதையின் சஸ்பென்ஸ். அருவியின் கீழே வாழும் ரோகிணியின் தம்பதியினர் அந்த குழந்தையை எடுத்து வளர்க்கின்றனர். அவர்களிடம் வளரும் பிரபாஸ், அருவியின் மீது ஏறி, அருவிக்கு அந்தப் பக்கம் என்ன இருக்கின்றது என்பதை அறிய பலமுறை முயற்சி செய்கிறார். முயற்சிகள் பல தோல்வி அடைந்த நிலையில், தேவதை வடிவில் தமன்னாவை பார்த்து அந்த தேவதையின் பின்னால் சென்று அருவியின் உச்சியை அடைகிறார். அங்கு சென்றவுடன் தான் தெரிகிறது, அங்கு ஒரு மிகப்பெரிய நகரமே இருக்கின்றது. அந்த நகரத்தில் கொடுங்கோல் அரசாட்சி செய்யும் ராணாவிடம் சிக்கித் தவிக்கும் ராணி அனுஷ்காவை காப்பாற்ற போராடும் கூட்டத்துடன் இணையும் பிரபாஸ், ராணியை மீட்டாரா? என்பதுதான் கதை.

முதலில் எஸ்.எஸ்.ராஜமவுலி குறித்து பார்த்துவிடுவோம். பிரமாண்டம் என்ற வார்த்தையெல்லாம் இந்த படத்தை விமர்சனம் செய்ய கண்டிப்பாக போதாது. அதைவிட வேறு ஏதாவது வார்த்தை தமிழில் இருக்கின்றதா? என்று தேட வேண்டும். இதுவரை தமிழ் சினிமா எத்தனையோ சரித்திர படங்களை பார்த்துள்ளது. ஆனால் இந்த அளவுக்கு பிரமாண்டமாய், ஒரு காட்சியில் கூட போலித்தனம் தெரியாமல், ஹாலிவுட் படத்தை தமிழில் டப் செய்து பார்ப்பது போல் இருக்கின்றது. கடைசி அரை மணி நேர போர்க்காட்சிகளும், அதில் கையாளும் தந்திரங்களும், போர் முனையில் தோல்வியின் விளிம்பில் இருக்கும் நிலையில் பிரபாஸ் செய்யும் ஒரு செய்கையால் ஏற்படும் திருப்பமும், இதுவரை தமிழ் சினிமா என்ன? உலக சினிமாவே பார்த்திராத காட்சிகள். போரில் பிரபாஸின் படை எதிரிப்படையை நோக்கி முன்னேறி செல்லும்போது திடீரென எதிரிப்படையினர் மக்களை கேடயமாக வைத்து போரிடுகின்றனர். அப்போது பிரபாஸ், ராணா இருவரும் தனித்தனியே எடுக்கும் முடிவுகள் சூப்பரோ சூப்பர். நமக்கு தெரிந்து அந்த போர்க்காட்சிகள் இவ்வளவு பிரமிப்பாக ஹாலிவுட் படங்களில் கூட வந்திருக்குமா? என்பது சந்தேகம்தான்.

இருந்தாலும் படத்தின் கதையின் வேகத்தை குறைப்பது போல் உள்ள பாடல்கள், கொஞ்சம் மெதுவாக நகரும் முதல்பாதியின் திரைக்கதை ஆகியவைகளை எஸ்.எஸ்.ராஜமவுலி கொஞ்சம் தவிர்த்திருக்கலாம். பிரபாஸ்-தமன்னா டூயட் பாடலின்போது, தியேட்டரில் உள்ள பாதி ஆடியன்ஸ் எழுந்து வெளியே போய் விடுகின்றார்கள். இதுமாதிரியான படங்களில் டூயட் பாடல்கள் தேவைதானா? என்று இயக்குனர் கொஞ்சம் யோசித்திருக்கலாம்.

கட்டுமஸ்தான் உடல், இளவரசருக்கே உள்ள கம்பீரம், தமன்னாவிடம் காதல், அன்னையை சங்கிலியால் பார்க்கும்போது வெகுண்டு எழும் காட்சிகள் ஆகியவைகளில் பிரபாஸ் நன்றாக நடித்துள்ளார். இருந்தாலும் தமிழ் சினிமா ரசிகர்களுக்கு மிக கொஞ்சமே அறிமுகமாகியுள்ள பிரபாஸ், எந்த அளவுக்கு எடுபட போகிறார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்த படத்தின் கதாநாயகி அனுஷ்கா என்று கூறப்பட்டாலும் இந்த முதல் பாகத்தை பொறுத்தவரை நாயகி கண்டிப்பாக தமன்னா தான். இதுவரை அழகு பதுமையாக நாம் பார்த்த தமன்னாவிடம் இவ்வளவு வீரம் எங்கே ஒளிந்திருந்தது. கண்களில் காட்டும் கோபம், வாள் வீச்சில் காட்டும் வேகம் ஆகியவை அனைத்துமே சூப்பர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அனுஷ்காவிற்கு இந்த முதல் பாகத்தில் நடிப்பதற்கு வாய்ப்புக் கொஞ்சம் குறைவுதான். அந்தக் குறையை இயக்குனர் இரண்டாம் பாகத்தில் நீக்குவார் என நம்புவோம். படத்தில் அனுஷ்கா வருவதே சில காட்சிகள்தான். அதிலும் பல நேரம் அவரை சங்கிலியால் கட்டிப்போட்டுள்ளார்கள். அனுஷ்காவை மட்டுமல்ல, அவர் நடிப்பையும் கட்டிப்போட்டதாகத்தான் எண்ண வேண்டியதுள்ளது.



எப்போதும் கண்களில் கோபத்தை காட்டும் வில்லன் கேரக்டரில் ராணா. போரில் எதிரிப்படை தலைவனை கொல்பவன் தான் அரசன் என ரம்யாகிருஷ்ணன் கட்டளையிட்டதும், பிரபாஸிக்கு முன் எதிரிப்படை தலைவனை கொல்ல காட்டும் வேகம், என அவருக்கு கொடுத்த கரக்டரை சுப்பராக செய்துள்ளார்.

அரச குடும்பத்துக்கு விசுவாசமான அடிமையாக சத்யாராஜ், தன் மகனுக்கு எப்படியாவது அரசன் பட்டம் வாங்கித்தர வேண்டும் என்பதற்காக சூழ்ச்சிகள் செய்யும் நாசர், கரக்டர்கள் படத்திற்கு பெரும் பலம்.

படையப்பா படத்திற்கு பிறகு ரம்யா கிருஷ்ணனுக்கு கிடைத்துள்ள அழுத்தமான வேடம். ஒரு போரில் அதிக வீரனை கொல்பவன் வீரன் இல்லை. அந்த போரில் ஒருவன் எத்தனை மக்களை காப்பாற்றுகின்றானோ அவனே உண்மையில் வீரன், போன்ற வசனங்களை ரம்யா கிருஷ்ணன் உச்சரிக்கும்போதும், தன்னை பற்றி இழிவாக பேசிய எதிரிப்படை தலைவன் உயிரோடு இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டு அதற்கு அவர் கூறும் காரணத்தை கேட்கும் போது நிஜமாகவே மனம் பதறுகிறது.

மரகதமணியின் இசையில் பாடல்கள் சுமாராகத் தான் இருக்கின்றது. வார்த்தைகளும் சரியாக புரியவில்லை. ஆனால் பின்னணி இசையில் மிரட்டியுள்ளார். குறிப்பாக போர்க் காட்சிகளின் அவர் போட்டுள்ள பின்னணி இசை ஹாலிவுட்டுக்கு இணையானது. வாழ்த்துக்கள். மதன்கார்க்கியின் கூர்மையான வசனங்கள் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன.

இந்த படத்திற்கு எத்தனை கமராக்கள் உபயோகித்திருப்பார்கள், எத்தனை உதவியாளர்கள் இருந்திருப்பார்கள் என்று யோசித்தால் தலை சுற்றும். அந்த அளவுக்கு ஒளிப்பதிவிலும் அவ்வளவு பிரமாண்டம். செந்தில்குமாருக்கு பாராட்டுக்கள்

எடிட்டர் முதல்பாதியில் இன்னும் கொஞ்சம் கத்தரி வைத்திருக்கலாம். ஆனால் இரண்டாவது பாதியில் கச்சிதமான எடிட்டிங்.

மொத்தத்தில் இரண்டாம் பாதியின் போர்க்காட்சியில் காட்டிய பிரமாண்டத்தை முதல் பாதியிலும் காட்டியிருந்தால் முழு திருப்தியாக இருந்திருக்கும். கடைசி அரை மணி நேர போர்க்காட்சிகளுக்காக படம் பார்க்கலாம். படத்தின் இரண்டாம் பாகத்திற்காக மக்களின் எதிர்பார்ப்பை தூண்டியிருக்கும் ராஜமௌளியின் தந்திரம்பாகுபலி கொலை.

முதலாம் பாகத்தை விட இரண்டாம் பாகம் அதை விட எதிர்பார்ப்பு மிக்கதாகவும் பிரமாண்டமானதாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை

# விஜய் டிவியின் செல்லம் நான் தான் ...



தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் டிடி என்கிற திவ்யதர்ஷினி, விஜய் டிவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று சிலநாள்களுக்கு முன்பு செய்திகள் உலவின. கடந்த ஞாயிறு அன்று எங்க வீட்டுச் செல்லம் டிடி என்கிற நிகழ்ச்சியை ஒளிபரப்பி வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்தது விஜய் டிவி.

'காபி வித் டிடி நிகழ்ச்சிக்கு பிரேக் தேவைப் படுவதால் சில வாரங்கள் அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாக வில்லை. மற்றபடி நான் விஜய் டிவியை விட்டுப் போகவில்லை. இந்த டிவியின் செல்லம் நான் தான்' என்று அந்த நிகழ்ச்சியில் பேட்டியளித்தார் டிடி. இதன்மூலம் தன்னைப் பற்றிய வதந்திக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். விஜய் டிவியின் தலைமை நிர்வாகி, கே. ஸ்ரீராம். இதுகுறித்து ட்வீட் செய்துள்ளார்.

'நம்ம வீட்டுச் செல்லம் நிகழ்ச்சி, டிடி பற்றிய வேடிக்கையான ஊகங்கள் மற்றும் வதந்திகளுக்கு முடிவு கட்டியுள்ளது என நம்புகிறேன். இந்தத் துறையில் டிடி மிகச்சிறப்பானவர்' என்று ட்வீட் செய்தார். இதற்கு டிடியும் நன்றி தெரிவித்து பதிலளித்தார்.

எங்க வீட்டுப் பிள்ளை சிவகார்த்திகேயன் போல எங்க வீட்டுச் செல்லம் டிடி என்று ஒருவர் ட்வீட் செய்ததை டிடி ரீட்வீட் செய்தார்.

நம்ம வீட்டுச் செல்லம் நிகழ்ச்சி தொடர்பாக டிடி ட்விட்டரில் தெரிவித்ததாவது:

'இந்த நிகழ்ச்சி, உங்களுக்குத் தேவையான எல்லாப் பதில்களையும் கொடுத்திருக்கும். இந்த நிகழ்ச்சி நடத்த உதவிய அனைவருக்கும் நன்றிகள். நான் தான் எப்பவும் செல்லம்!' என்றுள்ளது.

பெண்ணியம்

# இலக்கியப் பெண்களும் இன்றைய பெண்களும்

மனித இனத்தின் தோற்றத்திற்கான மையமாக அமைந்தவள் பெண் அப்படிப்பட்ட பெண்கள் அன்றைய காலத்தில் எந்த நிலையில் வாழ்ந்தார்கள் என்பதை இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்ட கதாபாத்திரங்களினூடாகவும் இன்றைய பெண்களின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்பதனை தற்கால நிகழ்வுகளின் ஊடாகவும் காண முடிகிறது.

ஆரம்ப காலங்களில் பெண்களின் வாழ்க்கை முறை என்பது ஓர் ஆண் சார்ந்ததாக இருந்தது. அது தந்தையாகவோ, சகோதரனாகவோ, கணவனாகவோ இருந்தது. இன்று அந்நிலையில் ஒரு சிறியளவிலான மாற்றம் கிடைத்திருந்தாலும் கூட ஒருவர் சார்ந்தே பெண் வாழ வேண்டும் என்ற முறை மாறவில்லை அதற்கு காரணம் பெண் சார்ந்த உடலியல் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் தான் என்று கூறவேண்டும்.

உலகளாவிய ரீதியில் பெண்கள் அறிவியல், அரசியல், விண்வெளி, கல்வி, வியாபாரம் என பல துறைகளிலும் காலடி எடுத்து வைத்து பல சாதனைகள் புரிந்து வருகிறார்கள். பெண்கள் பல்துறை சாதனையாளர்களாக முன்னேறியிருப்பினும் அவர்கள் மீதான வன்முறைகள் அன்றைய காலத்திலும் சரி இன்றைய காலத்திலும் சரி மாறாத ஒன்றாகவே இருக்கின்றது என்பது தவிர்க்க முடியாத உண்மை.

உலக சனத்தொகையில் அதிகளவானவர்கள் பெண்களாக இருக்கின்ற போதிலும் பெண்கள் மீதான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவற்றினை இன்றைய ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

துஷ்பிரயோகங்கள் பெண்கள் சிறுமிகளாக இருக்கும் போது ஆரம்பித்து வளர வளர பல்வேறு வடிவங்களில் தொடர்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் ஒரு சமூகம் மீதான பழிவாங்கல்களிற்கும் தனிப்பட்ட விரோதங்களை தீர்த்துக் கொள்வதற்கும் பெண்கள் தான் குறிவைக்கப்படுகின்றார்கள். காரணம் பெண்கள் உடல் சார்ந்து பலவீனமானவர்கள் என்பதும் அவர்கள் மீதான வன்முறை ஒரு சமூகத்தின் உணர்வினை காயப்படுத்தக் கூடியது என்பதுமேயாகும்.

மகாபாரதத்தில் திரௌபதி அரசசபையில் துயிலுரிந்து அவமானம் கொண்டாள். இராமாயணத்தில் இராவணன் சீதையை கவர்ந்து செல்கிறான் உலகம் சீதையின் கற்பின் மேல் சந்தேகம் கொண்ட காரணத்தினால் தீக்குளிக்கின்றாள். சிலப்பதிகாரத்தில் தவறாக தீர்ப்பு வழங்கிய மன்னன் மீது கோபம் கொண்ட கண்ணகி மதுரையை எரித்ததாக கூறப்படுகிறது. தன் துகில் உரிந்தவர்களின் உதிரம் எடுத்து தன் கூந்தலில் பூசாமல் அவிழ்ந்த தன் கூந்தலை முடியப் போவதில்லை என்ற சபதம் எடுத்த திரௌபதி அதனை வென்றதாக மகாபாரதம் கூறுகின்றது.

ஜான்சிராணி, மங்கம்மா போன்றோரை வீரப் பெண்களாக வரலாறு கூறுகின்றது. இப்படிப்பட்ட வீரப் பெண்களின் வழி வந்த பெண்கள் இன்று பலவீனமானவர்களாக இருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுகின்றது.






அன்று பெண்களைப் பாதுகாக்க சட்டங்கள் இருக்கவில்லை ஆனால் இன்று அந்தந்த நாடுகளில் அரசியல் அமைப்புக்களும் உலகளாவிய உடன்படிக்கைகளும் பெண்கள் பாதுகாப்பு, உரிமைகள் பற்றி பேசுகின்றன போதிலும் அன்றைய காலத்தை விட இன்றைய காலத்தில் தான் வன்முறைகள் பெண்களை நோக்கி அதிகரித்துள்ளது.

இன்று பெண்கள் பாதிக்கப்பட காரணம் பெண்களில் பலர் தமது உரிமைகள் என்ன என்பது பற்றி தெரியாத நிலையும் ஒன்ற என்றே கூறவேண்டும்.

இன்றைய பெண்ணியம் சார்ந்த போராட்டங்கள் எனது பார்வையில் ஒரு மேலைத்தேய கலாச்சாரத்தின் மீதான மோகம் சார்ந்துள்ளதாகவே தோன்றுகிறது.

இன்று பெண்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் எவ்வாறான விடயத்தினையும் செய்ய முடியும் இவைகள் தேவையாக இருந்தாலும் கூட இன்றைய கால கட்டத்தில் முக்கியமாக காணப்பட வேண்டியது பெண்களின் இருப்பையும் பாதுகாப்பினையும் உறுதி செய்வதேயாகும்.

ஒரு பெண் தற்காப்புக் கலை பயில்வதனை பல குடும்பங்கள் விரும்புவதில்லை அவ்வாறான நிலை மாற்றமடைய வேண்டும்.

ஒரு பெண் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டு விட்டால் அவள் மீதான சமூகத்தின் பார்வையை எவ்வாறு மாற்றுவது என்பது தொடர்பில் நாம் அனைவரும் ஒன்று சேர வேண்டும். சட்டங்கள் எல்லாம் ஒரு குற்றம் நடைபெற்று விட்டால் தண்டனை பற்றியே பேசுகிறது. அவ்வாறான நிலை மாறி குற்றங்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கான பொறி முறைகளை கையாள வேண்டும். "அடுப்பு ஊதும் பெண்களிற்கு படிப்பேது" என்ற காலம் மாறி புதுயுகம் படைக்கும் பெண்கள் உருவாகி வரும் இந்த வேளை அவர்களை பாதுகாத்து அவர்கள் வாழ்வுதனை ஒளியேற்றி இலட்சியம் படைக்கும் பெண்களாக மாற்றமடைய வேண்டும்.

ஆனந்த கோபாலபிள்ளை அருண்னியா
LLB[Hon] யாழ் பல்கலைக்கழகம்
Attonrney at Law (பயிலுனர் சட்டத்தரணி)

# அறிவியல் உண்மைகள்



அறிவியல் எவ்வளவு தான் வளர்ந்தாலும், மக்கள் சில விடயங்களை தவறாக புரிந்து கொண்டு தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வைரம் என்பது மிக உயர்ந்த விலையுள்ள ஆபரணம் ஆகும் . இது எங்கிருந்து கிடைக்கிறது என்று தெரியுமா, ஆம் பூமிக்கு அடியில் புதைந்துள்ள இறுகிப்போன நிலக்கரியில் இருந்து தான் இந்த அரிய வகை வைரம் நமக்கு கிடைக்கிறது.

ஆனால் இது எந்த ஆழத்திலிருந்து கிடைக்கிறது என்பது எத்தைனை பேருக்கு தெரியும்.அனைவரும் இது பூமிக்கு அடியில் 2 மைல் தொலைவில் கிடைக்கும் என்று கருதியிருப்பார்கள். ஆனால் பூமிக்கு அடியில் 90 மைல் தொலைவில் தான் இந்த வைரம் இருக்கும்.



வௌவால் ஒரு வித்தியாசமான உயிரினம், இவைகளுக்கு கண்கள் இல்லை என்பது உண்மைதான்.

ஆனால் இந்த உயிரினத்தால் பார்க்கவும் முடியும் . இவைகள் தங்கள் மீஒலி எனப்படும் சத்தத்தை எழுப்பி அதன் மூலம் தனக்கு எதிரில் என்ன பொருள்கள் இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளும் தன்மை கொண்டது.



சுத்தமான தண்ணீரில் அவ்வளவாக மின்சாரம் பாயாது. ஆனால் தண்ணீரில் நின்று மின்சாரக் கம்பியய் பிடித்தால் மின்சாரம் பாய்கிறதே அது ஏன் என்று கேட்கலாம்.

பொதுவாக தண்ணீரில் பல வகையான மினரல்கள் மற்றும் அழுக்குகள் படிந்திருப்பதால் அதில் மின்சாரம் பாய்கிறது. ஆனால் சுத்தமான நீரில் இப்படிப்பட்ட தாதுக்கள் இல்லாதிருப்பதால் மின்சாரம் பாய்வதில்லை.

மனிதன் இறந்த பின்பு மனித இரத்தம் பார்ப்பதற்க்கு நீலமாகவோ அல்லது அடர்ந்த சிவப்பு நிறமாகவோ இருக்காது.

ஆனால் தோலின் வழியாக பார்த்தால் இரத்தமானது எப்பொழுதும் நீல நிறமாகவே காட்சியளிக்கும்.

மனிதனின் பருக்கள் உருவாகக் காரணம் தவளைகள் மற்றும் தேரைகள் என்று பலரும் கருதுகின்றனர் இது தவறான கூற்றாகும். இதற்கு காரணம் தேரைகள் அல்ல, மனிதர்கள் தான், பருக்கள் இருக்கின்ற ஒருவரிடம் கைகளைக் குலுக்கினால் இவ்வாறான மருக்கள் தோன்றும் என்று அறிவியல் அறிஞர்கள் பலர் கூறியுள்ளார்கள்.

தீக்கோழியை யாராவது அச்சுறுத்தினால் அவற்றின் தலையை மணலில் புதைத்துக் கொள்ளும் என்று சிலர் கூறுவார்கள். ஆனால் அவற்றினை அச்சுறுத்தினால் அவைகள் இறந்தவை களைப் போல செயல் பட்டு தப்பிக்க முயலுமாம்.





விளையாட்டு



# கிரிக்கெட் கடவுள் சச்சின்

சச்சின் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு சாதனை நாயகன். எதிர்த்து ஆடும் நாட்டு வீரர்களின் தூக்கத்தை கெடுக்கும் பெயரும் இதுவே. சிரித்த முகத்தோடு எப்படி இத்தனை சாதனைகளை படைக்கமுடிகிறது என இளைஞர்களுக்கு புத்துணர்ச்சி கொடுக்கும் பெயரும் அதுவே.

மும்பை நகரில் ஒருநடுத்தரக்குடும்பத்தில் நான்காவது பிள்ளையாகப் பிறந்தவர். 1988 ல் 15வது வயதில் மும்பை சார்பாக விளையாடிய சச்சின் 100 ஓட்டங்களைக் குவித்தார். இது இவர் ஆடிய முதல் மாநிலங்களுக்கிடையிலான போட்டியாகும்.

இவர் 1989ம் ஆண்டு 16வது வயதில் முதன் முறையாக இந்தியாவின் சார்பாகத் தேர்வுப் போட்டிகளில் விளையாடினார். பாகிஸ்தான் அணிக்கு எதிரான இந்தத் தேர்வுத் தொடரில அவரால் ஓர் அரைச்சதம் மட்டுமே எடுக்க முடிந்தது.

1990ல் இங்கிலாந்து அணிக்கு எதிராக தனது முதல் சதத்தை பெற்றார். அன்று முதல் இந்திய அணியில் நிலையாகத் தொடர்ந்து விளையாடி வந்தார். தேர்வுப் போட்டிகளில் 15000 ஓட்டங்களுக்கு மேலும் ஒருநாள் போட்டிகளில் 18000 ஓட்டங்கள் குவித்த வீரர் ஆவார்.

அனைத்துலகப் போட்டிகளில் மொத்தமாக நூறு சதங்களை எட்டிய முதலாவது நபரும் இவரே. ஒருநாள் போட்டியில் இரட்டைச்சதம் அடித்த முதல்நபர் இவர்.

இத்தனை சாதனைகளின மத்தியில் சோதனைகளும் இல்லாமல் இல்லை. இருமுறை அணித்தலைவர் பொறுப்பு ஏற்றும் அவர் தலைமையின் கீழ் சொல்லத் தகுந்த வெற்றிகளை இந்திய அணிபெறவில்லை.

2001 போர்ட்எலிசபெத்தில் தென்ஆப்பிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது போட்டியில் பந்தைச் சேதப்படுத்தியதாக ஆட்ட நடுவர் மைக் டென்னஸ் சச்சின் மேல்குற்றம் சாட்டி ஒரு தேர்வுப் போட்டியில் விளையாடத் தடை விதித்தார்.

இனவெறியினால் தான் நடுவர் இவ்வாறு குற்றம் சாட்டுகிறார் என்பது பிரச்சினை பெரிது படுத்தப்பட்டது. இதன் பின்னர் அனைத்துலகத் துடுப்பாட்டக்கழகம் தலையிட்டுத் தடையை நீக்கியது.

2003ல் முழங்கை வலியினால்அவதிப்பட்டு 10 மாதங்கள் அனைத்துலகப் போட்டிகளில் பங்கு பெற முடியாமலிருந்தார். 2004ல் பாகிஸ்தானுடனான தேர்வுத்தொடரில் 194 ஓட்டங்கள் குவித்து விளையாடிக் கொண்டிருந்தபோது அணித்தலைவர் ராகுல்ராவிட் ஆட்டத்தை நிறைவு செய்வதாக அறிவித்ததால் சச்சினின் இரட்டைச்சதம் சாத்தியமில்லாமல் போனது.

சாதனை நாயகன் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக நவம்பர் 14 முதல் 18 வரை நடைபெற்ற 200வது டெஸ்ட்போட்டியுடன் ஓய்வுபெற்றார்.

இவரது ஓய்வின் போது இவருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது வழங்கப்பட்டது . இவ் விருதினைப் பெறும் முதல் விளையாட்டு வீரர் இவரே.

தொகுப்பு – மயூரன்

# 2016 ஒலிம்பிக் ஒரு பார்வை




- உலக விளையாட்டு திருவிழா என வர்ணிக்கப் படும் ஒலிம்பிக் போட்டிகள் நான்கு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும்.இறுதியாக இப் போட்டிகள் 2012ல் இங்கிலாந்தில் நடைபெற்றது.
- 31வது ஒலிம்பிக் போட்டி 2016ஆம் ஆண்டு பிரேசில் ரியோ டி ஜெனிரோ நகரில் ஆகஸ்ட் 5 ஆம் திகதி தொடக்கம் 21 வரை நடைபெறவுள்ளது.
- மொத்தம் 14 புதிய மைதானங்கள் கட்டுவது, புதுப்பிப்பது என 51 ஆயிரத்து 518 கோடி வரை பிரேசில் அரசு செலவிடுகிறது. போட்டி தொடங்க இன்னும் 13 மாதங்கள் மட்டும் மீதமுள்ள நிலையில் பெரும்பாலான பணிகள் முடியாமல் உள்ளன.
- ஒலிம்பிக் பார்க் மைதானம் 44 ஏக்கரில் தயாராகிறது. ஜிம்னாஸ்டிக்ஸ், ஜூடோ, சைக்கிளிங் உட்பட மொத்தம் 16 விளையாட்டுகள் இங்கு நடைபெறவுள்ளது.
- 10 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கும் டென்னிஸ் மைதான பணி பாதி தான் முடிந்துள்ளது. சுமார் 400 கோடியில் உருவாகும் 16 போட்டிகள் நடக்கவுள்ள ஒரு மைதானம், வரும் டிசம்பர் மாதத்திற்குள் தயாரானால் மட்டுமே, பயிற்சி போட்டிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தொடக்க விழாவுக்காக கடந்த 2014ல் உலக கோப்பை கால்பந்து மைதானம் 3,536 கோடியில் புதுப்பிக்கப்படுகிறது. இருக்கைகளின் எண்ணிக்கை அப்படியே இரு மடங்கு (78,000) அதிகரிக்கப்படும்.
- ஒலிம்பிக் பணிகளில் ஈடுபட்டுள்ள 2000 தொழிலாளர்கள், சம்பள உயர்வு கேட்டு கடந்த ஆண்டில் இரண்டு வாரம் வேலை நிறுத்தம் செய்தனர். இதுவும் ஒரு பாதிப்பாகி விட்டது.
- 15 ஆயிரம் பேர் அமரும் வசதி கொண்ட ஹொக்கி மைதானத்திற்கு அடித்தளம் மட்டும் தான் அமைக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்து வழிகள், பாலங்கள், வீரர்கள் மட்டும் செல்லும் பாதைகள், ஒலிம்பிக் மைதானத்துக்கு வருபவர்களுக்கான புதிய பஸ் நிலையங்களும் அமைக்கப்படுகின்றன.



ஐக்கிய தேசியக் கட்சி
றிஷாட்
நமது எதிர்காலம்
01




பாராளுமன்ற தேர்தல் - 2015
வன்னி மாவட்டம்
1 9
செல்வம் அடைக்கலநாதன்
தலைவர் - ரெலோ (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.)
எஸ்.வினோ நோகராதலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.)
1 2 3 4 5 6 7 8 9
தமிழ் தேசியக் கூட்டமைப்பு
இலங்கை தமிழரசுக் கட்சி

நினைவுகள்

# சரிந்தது இசை உலகம்



திரை இசை உலகில் சரித்திரம் படைத்து, "மெல்லிசை மன்னர்" என உலகத்தமிழர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட எம்.எஸ். விஸ்வாதனின் இயற்பெயர் மனயங்கத் சுப்ரமணியன் விஸ்வநாதன்.

கேரளாவின் பாலக்காடு அருகே எலப் புள்ளியில் 1928 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24-ல் பிறந்த இவர், தனது நான்காவது வயதிலேயே தந்தையை இழந்தார். கண்ணனூரில் உள்ள தனது தாத்தா கிருஷ்ணன் நாயர் வீட்டிலேயே வளர்ந்தார்.

பள்ளி படிப்பின் மீது அவ்வளவாக நாட்டம் இல்லாமல் இருந்த இவர் இசையின் மீது கொண்ட தனியாத தாகத்தால் நீலகண்ட பாகவதர் என்பவரிடம் முறைப்படி கர்நாடக இசையை பயின்று, தனது 13-வது வயதிலேயே மேடை கச்சேரிகளை நடத்தி அற்புதம் நிகழ்த்தியவர்.

*1940-1950* களில் தமிழ் சினிமாவின் பிரபல இசையமைப்பாளர்கள் வரிசையில் முதலிடத்தில் இருந்த சி.ஆர்.சுப்புராமன் இசைக் குழுவில் இவர் ஆர்மோனியம் வாசிக்கும் கலைஞராக இணைந்தார். அதே குழுவில் வயலின் கலைஞராக பணியாற்றிய டி.கே.ராமமூர்த்தியுடன் இவருக்கு ஏற்பட்ட நெருங்கிய நட்பு, தமிழ் ரசிகர்கள் காதுகளில் தேனை பாய்ச்ச தொடங்கியது.

உடல் நலக் குறைவால் சி.ஆர்.சுப்பு ராமன் மறைந்த பிறகு, அவருடைய இசையில் முழுமை பெறாமல் இருந்த தேவதாஸ், சண்டி ராணி, மணமகள் போன்ற படங்களை சுப்புராமனின் உதவியாளர்களாக இருந்த விஸ்வநாதனும், ராமமூர்த்தியும் தங்களது இசையமைப்பால் முடித்துக் கொடுத்தார்கள். இப்படங்களின் இணை இசையமைப்பாளர் களாக இவர்கள் இருவரும் சினிமா துறையில் முதல் தடம் பதித்தனர்.

இந்தப் படங்களின் பாடல்கள் அந்த காலத்தில் பட்டி, தொட்டி எல்லாம் ஒலித்து, படங்களும் வெற்றி பெற்றன. அப்போது, இந்தியில் சங்கர்-ஜெய்கிஷன் என்ற பெயரில் புகழ்பெற்ற இரட்டை இசையமைப்பாளர்கள் இருந்ததுபோல் தமிழில் விஸ்வநாதன்-ராமமூர்த்தி என்ற இரட்டை இசையமைப்பாளர் களின் இசைப்பயணம் தொடங்கியது.

இருவரும் இணைந்து முதன்முதலாக "பணம்" என்ற படத்திற்கு தனித்து இசையமைத்தார்கள். "ஆயிரத்தில் ஒருவன்" திரைப்படம் வரை இருவரும் இணைந்து 700 படங்களுக்கும் மேல் இசையமைத்து காலத்தால் அழிக்க முடியாத பாடல்களை ரசிகர்களின் காதுகளில் தாய்ப்பாலாக புகட்டினார்கள்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விஸ்வநாதன் - ராமமூர்த்திக்கு "மெல்லிசை மன்னர்கள்" என்று பட்டம் சூட்டி, இவர்களுக்கு பெருமை சேர்த்தார். "நீராரும் கடலுடுத்த" என்ற தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுக்கு மோகன ராகத்தில் இசை அமைத்த பெருமை எம்.எஸ்.விஸ்வநாதனையே சேரும்.

எம்.எஸ்.விஸ்வாதன் தன்னுடைய இசையமைப்பிலும் பல பாடல்களை பாடியுள்ளார். அவர் பாடிய பல பாடல்கள் ரசிகர்கள் மத்தியில்வரவேற்பை பெற்றது.

சினிமா பாடல்கள் தவிர, நூற்றுக்கணக் கான பக்தி பாடல் தொகுப்புகளுக்கும் எம்.எஸ்.வி. இசையமைத்து, அதன்மூலம் ஆன்மீகத்தையும் வளர்த்துள்ளார்.

இவர் பாடிய "அமரஜீவிதம் சுவாமி" என்ற பாடல் மிகவும் பிரசித்தி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இளையதலைமுறை இசையமைப்பாளர்க ளுடன் இணைந்து பணியாற்றுவதிலும் எந்த தயக்கமும் காட்டியதில்லைஎம்.எஸ்.வி. இசைஞானி இளையராஜாவுடன் இணைந்து "மெல்லத் திறந்தது கதவு", "செந்தமிழ் பாட்டு" "செந்தமிழ் செல்வன்" ஆகிய படங்களுக்கு இவர் இசையமைத்துள்ளார்.

இளையராஜாவின் மகனான யுவன் சங்கர் ராஜாவுடன் இணைந்து சமீபத்தில் வெளிவந்த "தில்லு முல்லு" படத்திலும் இவரது பங்களிப்பு உண்டு.

இசையமைப்பில் இருந்த வேளை யிலும், தன்னுடைய சிறு வயது கனவான நடிப்பு துறையிலும் அவ்வப்போது கவனம் செலுத்தினார். "கண்ணகி" படத்தில் சிறு கேரக்டரில் நடிக்க ஆரம்பித்த அவர் "காதல் மன்னன்", "காதலா காதலா" உள்ளிட்ட சில படங்களில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்திருந்தார்.

இசையமைப்பிலும் பல்வேறு யுத்திகளை கையாள்வதில் எம்.எஸ்.வி. கைதேர்ந்தவர். சிவாஜி கணேசன் நடித்த "புதிய பறவை" படத்தில் இடம்பெற்ற "எங்கே நிம்மதி" என்ற பாடலுக்காக 300-க்கும் மேற்பட்ட வயலின்களை பயன்படுத்தி ஒரு புதிய சாதனையை படைத்தார்.

பாகப்பிரிவினை படத்தில் இடம் பெற்ற "தாழையாம் பூ முடித்து" என்ற பாடலுக்கு இவர் பயன்படுத்திய இசைக் கருவிகளின் எண்ணிக்கை மூன்றே மூன்றுதான் என்றால் நம்ப முடிகிறதா? இதுபோல் பல்வேறு ஆச்சரியங்களை தனது இசையில் புகுத்தி அனைவரையும் ரசிக்க வைத்தவர் தான் எம்.எஸ்.வி.

பிறநாட்டு இசையை தமிழ் திரைப்படங் களில் புகுத்தும் புதுவித முயற்சியை முதன்முதலில் செய்ததும் இவர்தான். பெர்சியன் நாட்டு இசையை காவல்காரன் படத்தில் "நினைத்தேன் வந்தாய்" நூறு வயது என்ற பாடலிலும், எகிப்து இசையை சிவந்தமண் படத்தில் இடம்பெற்ற "பட்டத்து ராணி" பாடலிலும், ஜப்பான் இசையை உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் இடம்பெற்ற "பன்சாயி.., காதல் பறவைகள்" என்ற பாடலிலும், லத்தீன் நாட்டு இசையை சாந்தி படத்தில் இடம்பெற்ற "யார் அந்த நிலவு" என்ற பாடலிலும் கொண்டு வந்து உலக இசையை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர்.

பாடலை இருபதே நிமிடங்களில் கம்போஸ் செய்து முடித்த பெருமையும் இவருக்கே உண்டு. "நெஞ்சில் ஓர் ஆலயம்" படத்தில் இடம்பெற்ற முத்தான முத்தல்லவோ என்ற பாடலை இருபதே நிமிடங்களில் ஒலிப் பதிவு செய்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தியவர் இவரே.

கண்ணதாசனும், எம்.எஸ்.வியும் பிரித் துப் பார்க்க முடியாத இரட்டைக்குழல் துப்பாக்கியாக ஒன்றுபட்டு செயல்பட்டதால் காலத்தால் அழிக்க முடியாத பல பாடல்கள் உருவாகின. தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி உள்பட 1200 படங்களுக்கும் மேல் இசையமைத்த சாதனைக்கு சொந்தக்காரராக

"மெல்லிசை மன்னர்" எம்.எஸ்.விஸ்வாநாதன் விளங்குகிறார்

தற்போதைய இளைய தலைமுறை இசையமைப்பாளர்களுக்கும், இனிவரும் கலைஞர்களுக்கும் முன்னோடியாக உழைப்பால் உயர்ந்து, உழைப்பாளிகளின் களைப்பை போக்கி, ஆறுதலையும் மன நிம்மதியையும் அளித்து வாழ்ந்த எம்.எஸ்.வி.யின் பிரிவு, தமிழ் திரையுலகுக்கு ஒரு மிகப்பெரிய பேரிழப்புதான். மண்ணை விட்டு அவர் பிரிந்தாலும், அவரது இசையில் அமைந்த பல்லாயிரம் பாடல்கள் நமது நெஞ்சை விட்டு பிரியாமல், காலத்தால் என்றுமே அழிக்க முடியாத அமரகாவியமாக காற்றலைகளில் தவழ்ந்து கொண்டே இருக்கும். அவருக்கு வயது 88.தமிழ் திரை உலகின் பொற்காலம் என்று சொல்லப்படும் எம்.ஜி.ஆர்,சிவாஜி காலத்தில், புகழ் பெற்ற இசையமைப்பாளராக உச்சத்தில் இருந்தவர் எம்.எஸ்.விஸ்வநாதன்.

தனது மெல்லிசை மூலம் தமிழ் திரை உலகையும், ரசிகர்களையும் கட்டிப்போட்டவர். இவரும், டி.கே.ராமமூர்த்தியும் இரட்டையர்களாக இணைந்து இசையமைத்த பாடல்கள், தலைமுறைகளை கடந்து இன்றும் முணுமுணுக்கப்படுகின்றன.

இருவரும் இணைந்து 700 படங்களுக்கும், எம்.எஸ்.விஸ்வநாதன் தனியாக 500 படங்களுக்கும் மேல் இசையமைத்து இருந்தார்கள். இரண்டு பேரும் இணைந்து இசையமைத்த முதல் படம், "பணம்." எம்.எஸ்.விஸ்வநாதன் கடைசியாக இசையமைத்த படம், "சுவடுகள்."

பாலச்சந்தரின் மூன்று முடிச்சு படத்தில் எதிர்மறை நாயகனாக நடித்திருந்தார் ரஜினி. அதில் கமலுக்கு கௌரவ வேடம். அந்தப் படத்தில் ஒரு பாடகராக அவருக்கு முதலில் குரல் தந்தவர் எம்.எஸ். விஸ்வநாதன். படகிலிருந்து தவறி ஆற்றுக்குள் விழுந்து மூழ்கும் கமல் ஹாசனை கண்டுகொள்ளாமல்,



படகை வேகமாக செலுத்தியபடி "மணவினைகள் யாருடனோ.. மாயவனின் விதிவகைகள்" என்று பாடும் ரஜினிக்கு குரல் தந்தவர் எம்.எஸ்.விஸ்வநாதன்.

ரஜினியும் கமலும் கடைசியாக இணைந்து நடித்த நினைத்தாலே இனிக்கும் படத்தில் இடம்பெற்ற சம்போ சிவ சம்போ... பாடல் ரஜினிக்கு பெரும் திருப்புமுனையாகவும், ஏராளமான ரசிகர்களைப் பெறவும் உதவியது.

இந்தப் பாடலையும் எம்.எஸ்.விதான் பாடினார். பின்னர் சங்கர் சலீம் சைமன் படத்தில் இடம்பெற்ற சிந்து நதிப் பூவே என்ற பாடலிலும் ரஜினிக்கு குரல் கொடுத்திருப்பவர் எம்.எஸ்.வி.

எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்பு இருதய அறுவை சிகிச்சை நடந்தது. சில மாதங்கள் வீட்டிலேயே ஓய்வு எடுத்து வந்த அவர், அதன்பிறகுதான் "சுவடுகள்" படத்துக்கு இசையமைத்தார்.

கடந்த மாதம் 20ந் திகதி திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு சென்னை அடையாறில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது, எம்.எஸ்.விஸ்வநாதன் அதிகாலை 4.15 மணிக்கு காலமானார். ■

# தமிழ் மக்கள் தமிழூர் சின்னமான வீட்டுக்கு வாக்களிப்பார்களே தவிர தனி நபர்களுக்கு அல்ல

சரா. புவனேஸ்வரன்

தமிழ் மக்கள் காலம் காலமாக கொடுமையான துன்பங்களை அனுபவித்தே வருகின்றனர். அதன் வெளிப்பாடாக வீட்டுச் சின்னத்தை தமது சின்னமாகவும், அடையாளமாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு உரையாற்றினார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரும், முன்னாள் கிராமசபைத் தலைவர் நா.சி.சரவணமுத்துவின் புதல்வரும், விரிவுரையாளரும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளரும், கல்விச் சேவையாளருமான சரா. புவனேஸ்வரன்.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் பட்டித்திடல் கிராமத்தில் நடைபெற்ற தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பிராந்திய ஒழுங்கமைப்பாளர்களுடனான ஒன்று கூடலில் உரையாற்றிய சரா.புவனேஸ்வரன்,



தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இணைந்து முகவரிகளைப் பெற்ற சிலர் பிரிந்து சென்று தமிழ்த்தேசியத்திற்கு எதிராக தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வி அடைந்தமை வரலாற்று உண்மைகள்.

இதனைப் புரிந்துகொள்ளாத இன்னும் சிலர் மக்களால் தொடர்ந்தும் புறக்கணிக்கப் படுகின்றனர். இன்னும் புறக்கணிக்கப்படுவர்.

தமிழர் என்ற அடையாளத்தைக் கொண்ட ஒவ்வொருவரும் தமிழ்த் தேசிய உணர்வோடு வாழவேண்டியது கட்டாயத்தின் கடமை. இதற்கான பல ஆயிரக்கணக் கானவர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

தமிழ் மக்கள் தமது இருப்பை உறுதிப் படுத்துவதற்காகவும், உலக அரங்கில் அதனை நிரூபிப்பதற்காகவும், நல்லாட்சி அரசோடு பேரம் பேசும் திராணியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இந்தத் தேர்தலை முறையாகப் பயன்படுத்துவதோடு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள எண்பத்தியிரண்டாயிரம் தமிழர் வாக்குகளும் முழுமையாக அளிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். ■



தமிழகம்

# ஜெயாவின்

## வேதா நிலைய ரகசியம்



ஜெயலலிதா ஆட்சி என்றாலே, வாரமிருமுறை மற்றும் வார இதழ்களுக்கு செய்திப் பஞ்சம். திமுக ஆட்சியென்றால், கருணாநிதியின் ஆலமரம் போன்ற குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு விழுதும் செய்திகளை அள்ளித்தரும். ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் உள்ள அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் அதிகாரிகள், பேசுவதற்கே தயங்குவார்கள். எந்தத் தகவலும் வெளிவராது. வரும் தகவல்களும் ஊகத்தின் அடிப்படையிலேயே இருக்கும். தகவல்கள் துளியும் கசியாமல் இரும்புக் கோட்டையாகத்தான் தன் வீட்டையும், அதிமுக கட்சியையும் நடத்தி வருகிறார் ஜெயலலிதா.

சமீப காலமாக, ஜெயலலிதாவின் உடல்நிலையில் சிக்கல் என்ற தலைப்பில் பல்வேறு ஊடகங்களில் செய்தி கசிந்தவண்ணம் இருந்தன. மேலும் டெல்லியில் இருந்து வெளிவரும் ஊடகங்களும், தேசிய ஊடகங்களும், இது குறித்து பல்வேறு செய்திகளை வெளியிட்டன. அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக ரெட்டிப் இணையதளம் மீது அவதூறு வழக்கை தொடுத்தார் ஜெயலலிதா. ஜெயலலிதா அமெரிக்கா செல்கிறார் என்று அட்டைப்படக் கட்டுரை வெளியிட்ட நக்கீரன் மீது வழக்கு தொடுக்காத ஜெயலலிதா, டெல்லியை தலைமையிடமாகக் கொண்ட ரெட்டிப் இணையதளம் மீது ஏன் வழக்கு தொடுத்தார் என்பது புரியாத புதிராக உள்ளது. இதற்கெல்லாம் சுவையான பின்னணி உள்ளது.

மத்திய அரசின் நம்பர் இரண்டாக இருப்பவர் அருண் ஜெட்லி என்பது அனைவரும் அறிந்த விஷயம். அப்படி நம்பர் டூ வாக இருக்கும் ஒரு அமைச்சர், மோடியின் நம்பிக்கைக்குரிய ஒரு அமைச்சர், ஒரு தண்டிக்கப்பட்ட குற்றவாளியை சந்திப்பது என்பது மிக மிக சர்ச்சையான விஷயம். ஒரு அரசாங்கம் செய்யக் கூடாத விஷயம். ஆனால் மோடி அரசு மாநிலங்களவையில் 48 எம்.பிக்கள் குறைவாக உள்ளதால், எந்த சட்டத்தையும் நிறைவேற்ற முடியாத நிலையில், அந்த ஒத்துழைப்புக்காக எத்தகைய கிரிமினலையும் சந்தித்து கெஞ்ச தயாராகவே இருந்தது. அந்த கெஞ்சல் திட்டத்தின் ஒரு வடிவம் தான் ஜெயலலிதாவுடனான சந்திப்பு. ஜெயலலிதாவுடன் நடந்த சந்திப்பில், சொத்துக் குவிப்பு வழக்கு குறித்து எதுவும் விவாதிக்கப்படவில்லை என்பதே கார்டன் வட்டாரங்கள் கூறும் தகவல். சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து ஜெயலலிதா வெளிவர அவர் நிச்சயமாக மத்திய அரசை நம்பியிருக்கவில்லை. குமாரசாமி "நான் விற்பனைக்கு" என்று தன் கழுத்தில் போர்ட் மாட்டிக் கொண்டு இருந்த நிலையில் அவருக்கு மத்திய அரசின் உதவி துளி கூட தேவைப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், அருண் ஜெட்லிக்கே, ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டது அதிர்ச்சியே என்கின்றனர். மே 11 அன்று பாராளுமன்றத்தின் லாபியில் டைம்ஸ் நவ் அரசியல் எடிட்டர் நாவிகா குமாரோடு உரையாடிக்கொண்டிருந்தார் அருண் ஜெய்ட்லி. அப்போது ஜெயலலிதாவின் விடுதலை செய்தியை அருண் ஜெட்லியிடம் கூறுகிறார் நாவிகா. கேட்டவுடன், ஜெய்ட்லியின் முகமே ஒரு கணம் இருண்டு விட்டது. ஆனால் ஒரு சில வினாடிகளில் சுதாரித்துக் கொண்ட அருண் ஜெட்லி, சட்டென்று இயல்பாக பேசினார். ஆக, அருண் ஜெட்லிக்கே ஜெயலலிதாவின் விடுதலை வியப்பைத்தான் அளித்துள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கு அல்லாமல், ஜெயலலிதா மற்றும் பாஜக இடையே வேறு ஏதோவொரு டீல் பேசப்பட்டுள்ளது. அந்த டீலின் விளைவாகவே, மத்திய அரசுக்கு மாநிலங்களவையில் ஜெயலலிதா தொடர்ந்து அளித்து வந்த ஆதரவு. நிலம் கையப்படுத்தல் சட்டம் மக்களவையில் நிறைவேற்றப்படுத்தப் படுகையில், அனைத்து எதிர்க்கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மாநிலங்களவையில் பெரும் அமளி நிலவியது. ஆனால் அதிமுகவின் அனைத்து எம்.பிக்களும், மக்களவையில் அந்த மசோதாவை ஆதரித்தனர். இது குறித்த அறிக்கை வெளியிட்ட திமுக தலைவர் கருணாநிதி, "செயற்கையாக என்ன சமாதானம் கூறினாலும், அதிமுக நிலம் கையகப்படுத்தும் மசோதாவில் பாஜக வை ஆதரித்ததற்கான அடிப்படைக் காரணத்தை மறைக்க முடியாது. பூனைக்குட்டி வெளியே வந்துவிட்ட உண்மை உலகத்திற்கு நன்றாகவே புரியும்" என்று கூறினார்.

இதற்கு நீண்ட விளக்கம் அளித்த ஜெயலலிதா பக்கம் பக்கமாக, நில கையப் படுத்தல் மசோதாவுக்கு ஆதரவு அளித்தது ஏன் என்று ஒரு அறிக்கையை மார்ச் மாதத்தில் வெளியிட்டிருந்தார். ஜெயலலிதா தனது அறிக்கையில்

"தற்போது மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள மசோதா 5 வகை திட்டங்களுக்கு சில விதிவிலக்கு அளிக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. மாநில அரசு தேவை என்று கருதினால், ஒவ்வொரு திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப, பொது நலத்திற்கு ஏற்ப, அந்தந்த திட்டத்திற்கு மாநில அரசு, சில குறிப்பிட்ட வரையறையிலிருந்து விலக்களிக்க இயலும். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வழங்கும் இந்த சட்டத்தை எதற்காக எதிர்க்க வேண்டும்?

குறிப்பிடப்பட்ட 5 வகை நில எடுப்புக்கும் இந்த இரு அத்தியாயங்களிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டுமா என்பதை, சம்பந்தப்பட்ட மாநில அரசே முடிவு செய்யலாம் என்னும் போது, அந்தந்த திட்டங்களுக்கு ஏற்ப, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மாநில அரசு முடிவு செய்ய இயலும். 2013 ஆம் ஆண்டைய மூலச் சட்டத்தில், 13 மத்திய சட்டங்களுக்கு பொது விலக்கு அளிக்கப்பட்டுள்ளதே? அது போன்று பொது விலக்கு எதுவும், இந்த 5 வகை நில எடுப்புகளுக்கு தற்போது வழங்கப்படவில்லையே? மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வேண்டாம் மத்திய அரசிடம் தான் இந்த அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்கிறாரா திரு. கருணாநிதி?" என்று கூறியிருந்தார்.

நிலம் கையகப்படுத்தல் சட்டம் என்ற ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டால், இந்தியாவில் உள்ள அனைவரும் சுபிட்சம் பெறுவர் என்பது போல பேசியிருந்தார் ஜெயலலிதா.

மத்திய அரசின் திட்டக்கமிஷன் கூட்டமான நிதி ஆயோக் கூட்டத்துக்கு முக்கிய அரசு அலுவல்கள் காரணமாக வர இயலாது என்று கூறியிருந்த ஜெயலலிதா, நில கையகப்படுத்தும் சட்டம் தொடர்பான தனது நிலைப்பாட்டில் அந்தர் பல்டி அடித்துள்ளார். திடீரென்று விவசாயிகளின் அபலக்குரல் தனது காதில் விழுந்தது என்று முதலைக்கண்ணீர் வடிக்கிறார்.

ஜெயலலிதாவின் இந்த திடீர் நிலைப்பாட்டை கடுமையாக விமர்சித்து அறிக்கை வெளியிட்டுள்ள மருத்துவர் ராமதாஸ், தனது அறிக்கையில், " டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில்,கடிதம் வடிவில் தாக்கல் செய்யப்பட்ட ஜெயலலிதாவின் உரையில் தான் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், இதற்காக ஜெயலலிதா கூறியிருக்கும் காரணம் தான் நம்பும்படியில்லை. நிலச் சட்டத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கு தமிழகத்திலுள்ள உழவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால், அவர்களின் உணர்வுகளை மதித்து தமது அரசு இந்த நிலைப்பாட்டை எடுத்திருப்பதாக தெரிவித்துள்ளார். இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனெனில், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தில் தேசப் பாதுகாப்பு, ராணுவம், ஊரக கட்டமைப்பு வசதிகள், சமூகக் கட்டமைப்புகள், தொழில் தாழ்வாரங்கள் ஆகிய 5 தேவைகளுக்காக நிலங்களை கையகப்படுத்தும் போது, நில உரிமையாளர்களில் 70 விழுக்காட்டினரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் நிலங்களை கையகப்படுத்தும் போது, அதனால் ஏற்படும் சமூகத் தாக்கம் குறித்து கண்டிப்பாக ஆய்வு செய்யப்பட வேண்டும் பாசன வசதியுள்ள பல்வகைப் பயிர்கள் விளையும் தன்மையுள்ள நிலங்களை கையகப்படுத்தக் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், மோடி அரசு இந்த பிரிவுகள் அனைத்தையும் நீக்கியிருக்கிறது.

இந்த நடவடிக்கை உழவர்களை கடுமையாக பாதிக்கும் என்று தொடக்கத்திலேயே எதிர்த்ததுடன், போராட்டமும் நடத்தினேன். மற்ற கட்சிகளும் இதே நிலைப்பாட்டையே கொண்டிருந்தன. உழவர் அமைப்

புகளும் தொடர் போராட்டங்களை நடத்தின.

ஆனால், சொத்துக் குவிப்பு வழக்கை எதிர்கொண்டு வந்த ஜெயலலிதா மட்டும் இச்சட்டத்தை ஆதரித்ததுடன், கடந்த மார்ச் 10 ஆம் தேதி மக்களவையில் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தை ஆதரித்து வாக்களிக்கும்படி அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு ஆணையிட்டிருந்தார்.

அதன்பிறகும் தமிழக சட்டப்பேரவையில் அப்போதைய முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும், பேரவைக்கு வெளியே ஜெயலலிதாவும் இச்சட்டத்தை தீவிரமாக ஆதரித்தனர்.

இது குறித்து கடந்த மார்ச் 15 ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில்," நிலம் எடுத்தல் சட்டத்திருத்த மசோதா 5 வகைத் திட்டங்களுக்கு சில விதிவிலக்குகளை அளிக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

மாநில அரசு தேவை என்று கருதினால் ஒவ்வொரு திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப, பொதுநலனுக்கு ஏற்ப விலக்களிக்க முடியும். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் அளிக்கும் முடிவை எதற்காக எதிர்க்க வேண்டும்" என்று கூறினார். ஆனால், இப்போது திடீரென தமது நிலையை மாற்றிக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பிரச்சினையின் தொடக்கக் கட்டத்தில் உழவர்களும், எதிர்க்கட்சிகளும் எழுப்பிய எதிர்ப்புக் குரலை புரிந்து கொள்ள முடியாத ஜெயலலிதாவுக்கு, இப்போது உழவர்களின் குரல் புரிந்திருப்பது விந்தையாக உள்ளது.

தமக்கு காரியம் ஆக வேண்டுமானால் எத்தகைய நாடகத்தையும் அரங்கேற்ற ஜெயலலிதா தயங்க மாட்டார். அடுத்த ஆண்டு தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், நிலம் கையகப்படுத்துதல் சட்டத் திருத்த மசோதாவை ஆதரித்தால், மக்கள் தம்மை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் என்ற அச்சம் காரணமாகவே இப்படி ஒரு நிலைப்பாட்டை ஜெயலலிதா எடுத்திருக்கிறார்.

ஒருவேளை தமிழக விவசாயிகளின் நலனில் ஜெயலலிதாவுக்கு உண்மையாக அக்கறை இருந்தால், நிலம் கையகப்படுத்துதல் சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அதிமுக எதிர்க்கும் சட்டத்திருத்த முன்வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள 5 தேவைகளுக்காக தமிழகத்தில் ஒரு கைப்பிடி மண் கூட கையகப்படுத்தப்படாது என்று வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்."

ராமதாஸின் இந்த அறிக்கை, ஜெயலலிதாவின் ஓரங்க நாடகத்தை அம்பலப் படுத்துவதாக உள்ளது.

தலைமைச் செயலகத்துக்கு செல்வதும், ஆளுனர் மாளிகைக்கு செல்வதும், ஜெயலலிதாவின் ஓரங்க நாடகத்தினால் தடைபட்டிருந்த நிலையில், புதனன்று அவசர அவசரமாக புதன் ஓரை சமயத்தில் தலைமைச் செயலகம் சென்று, சரியாக நாற்பது நிமிடங்கள் இருந்து விட்டு மீண்டும் வேதா நிலையம் திரும்பியுள்ளார் ஜெயலலிதா. இந்த லட்சணத்தில் "முக்கிய அலுவல்கள்" காரணமாக, டெல்லி செல்ல முடியவில்லையாம். இப்படி ஜெயலலிதா மெனக்கெட்டு, புதனன்று தலைமைச் செயலகம் சென்ற காரணமே, தனக்கு சிறுநீரகக் கோளாறு, மற்றும் கல்லீரல் கோளாறு என்ற வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே.

இந்த வதந்திகளை கிளப்புவதில், தமிழக ஊடகங்களும் முன்னணியில் இருந்தன. டெகல்கா இணையதளம் ஒரு படி மேலே சென்று, ஜெயலலிதா தொடர்ந்து பெத்தடின் ஊசி போட்டதால், சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்து விட்டன என்று அப்பட்டமான ஒரு பொய்யை செய்தியாகப் போட்டும், அந்த ஊடகங்கள் மீதெல்லாம் ஜெயலலிதா வழக்கு போடவில்லை. ஆனால், ரெட்டிப் இணைய தளத்தின் மீது மட்டும் வழக்கு போட்டுள்ளார். இதற்கான பின்னணி என்னவென்றால், ரெட்டிப் இணையதளம் ஓரளவுக்கு நிதானமான, பழைமைவாத ஊடகம். கிட்டத்தட்ட இந்து நாளேடு போல. முழுமையாக செய்திகளை சரிபார்த்த பிறகே வெளியிடுவர். அப்படிப்பட்ட ஒரு இணையதளத்தில், ஜெயலலிதாவுக்கு விரைவில் அறுவை சிகிச்சை நடக்கவிருக்கிறது. அதற்காக அவர் வெளிநாட்டுக்கு பயணம் செய்ய உள்ளார் என்பதோடு, கூடுதலாக போட்டிருந்த வார்த்தைதான் தற்போது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. அந்த கூடுதலான வார்த்தைகள் என்னவென்றால், "மத்திய அரசு வட்டாரத் தகவல்களின்படி" என்பதே.

இந்த மத்திய அரசு வட்டாரத் தகவல் என்பது, மத்திய உளவுத்துறையின் மூத்த அதிகாரி என்கிறது டெல்லி வட்டாரங்கள். அப்படிப்பட்ட ஒரு மூத்த அதிகாரி சொல்லாமல், ரெட்டிப் இணையதளம் அப்படியொரு செய்தியை வெளியிட்டிருக்காது.

இதுதான் ஜெயலலிதாவை அதிகமாக கோபப்படுத்தியது. அதற்கு நேரடியாக பதிலளிக்கும் விதமாகவே ரெட்டிப் இணையதளம் மீது வழக்கு போட்டிருக்கிறார். நக்கீரன் இதழ், இந்த வாரம் அட்டைப்படக் கட்டுரையாக "ஜெயலலிதாவுக்கு டயாலிசிஸ்" என்ற செய்தியை போட்டதை அடுத்து, நக்கீரன் மீதும், செய்வாயன்று மான நஷ்ட வழக்கு தொடுத்தார்.

ஜெயலலிதாவின் இந்த நடவடிக்கைகளைப் பார்க்கையில், உடல் நலம் சரியில்லாதது போன்ற அவரின் நாடகம் அவர் எதிர்ப்பார்த்தது போல வெற்றிபெறவில்லை என்பதையே நிரூபிக்கிறது. வாரக்கணக்கில் தலைமைச் செயலகமே செல்லாமல், உண்டு உறங்கி, நாட்களை வெட்டியாக கழித்துக் கொண்டிருந்த ஜெயலலிதா, தன்னுடைய தந்திரம் பலிக்கவில்லை என்பதாலோ என்னவோ, தலைமைச் செயலகத்துக்கு கடந்த புதனன்று வருகை தந்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் உடல் நிலை சீராக இருக்கிறது. சர்க்கரை, ரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகளைத் தவிர்த்து, ஆபத்து விளைவிக்கும் எந்த சிக்கலும் ஜெயலலிதாவுக்கு இல்லை என்பதை ஓர் இணையம் மட்டுமே அறுதியிட்டு கூறியது.

ஜெயலலிதா எதற்காக இப்படியொரு நாடகத்தை நடத்தினார், பிஜேபியோடு செய்து கொண்ட உடன்பாடு என்ன என்பவை எல்லாம், வேதாநிலைய ரகசியங்களாகவே இருக்கும்.

– சவுக்கு



மருத்துவம்

# நாட்டு மருத்துவம்



தலைவலி, மூக்கு நீர் ஒழுகுதல், அதிக தாகம், குமட்டல், வாந்தி, உடல் எரிச்சல், சூதக அழுக்கு, ஆண்மைக் குறைவு ஆகிய வியாதிகளுக்கு குங்குமப் பூ அரிய மருந்தாகும். குங்குமப் பூவை 1 பங்கு எடுத்து, அதை 80 பங்கு தண்ணீரில் ஊற வைத்து வடிகட்டி, அதில் 30 மிலி அளவு காலை, மாலை இருவேளை அருந்தி வர தலைவலி, மூக்கு நீர் ஒழுகுதுல், அதிக தாகம், குமட்டல், வாந்தி, உடல் எரிச்சல், சூதக அழுக்கு, ஆண்மைக் குறைவு ஆகியவை நீங்கும். குங்குமப் பூவுடன் தேன் கலந்து தினமும் இருவேளை உட்கொண்டு வர ஆஸ்துமா முதலிய சுவாச நோய்களை போக்கி சுவாசத்தை எளிதாக்கும். அம்மை நோய் கண்டவுடன் துளசி இலைகளையும், குங்குமப்பூவையும் சேர்த்து அரைத்து உட்கொள்ள கொடுக்க அம்மை நோய் குணமாகும்.



இளநரை என்பது பித்தம் சம்பந்தப் பட்ட விஷயம். பித்தப் பிரகிருதிகளுக்கு இளம் வயதிலேயே தலை நரைத்துவிடும். ஆனால் அதற்கு நல்ல மருந்துகள் இருக்கின்றன. உணவில் கறிவேப்பிலையை நிறைய சேர்க்க வேண்டும். பசுவெண்ணெய்க்கு இளநரையை மாற்றும் தன்மை இருக்கின்றது. தினமும் பசு வெண்ணையைச் சிறிது சாப்பிட்டு வர வேண்டும். வெண்ணெயுடன் கறிவேப் பிலைப் பொடியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். இதே வெண்ணையைத் தலை, கால்களில் அழுத்தித் தேய்க்க வேண்டும். தலைமுடியின் வளர்ச்சிக்கும் கருமைக்கும் நெல்லிக்காய் நல்ல மருந்து. நெல்லிக்காயை வெட்டி கொட்டை நீக்கி நிழலில் காயவைக்கவும். உலர்ந்த பிறகு தேங்காய் எண்ணெயில் வறுக்க வேண்டும். காய் நன்றாக கருகும்வரை வறுத்தால், எண்ணெய் நன்றாக கருநிறமாகிவிடும். இந்த எண்ணெய் தலைக்கு நல்லது. இளநரையைத் தடுக்கும். பித்தம் சமனமாகும். உலர்ந்த நெல்லிக்காயைத் தண்ணீரில் ஓரிரவு ஊறப்போட்டு அந்தத் தண்ணீரைத் தலையில் தேய்க்கலாம். இளநரைக்கு நல்லது.

வெந்தயத்தை வறுத்து பொடி செய்து 1 டம்ளர் நீரில் ஊற வைத்து உட்கொள்ள வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், சுரம், உட்சூடு, வெள்ளை, சீதக்கழிச்சல் முதலியவைகள் காய்ச்சிக் கொடுக்க பால் சுரக்கும்.

வெந்தயத்தை ஒரு கைப்பிடியளவு எடுத்து ஊற வைத்து தலை முழுகிவர முடி வளரும். அது முடி உதிர்ந்து போவதைத் தடுக்கும். வெந்தயத்தை உலர்த்தி பொடி செய்து மாவாக்கிக் களி கிண்டிக் கட்ட புண், பூச்சி நோய்களைப் போக்கும்.

வெந்தயத்தை வறுத்து இத்துடன் வறுத்த கோதுமையைச் சேர்த்து கோப்பிக்குப் பதிலாக வழங்கலாம் இதனால் உடல் வெப்பம் நீங்கும்.

**வெந்தய லேகியம்:** வெந்தயம், மிளகு, திப்பிலி, பெருங்காயம் இவற்றை சமஅளவு எடுத்து உலர்த்தி நன்றாக வறுத்துப் பொடி செய்து சர்க்கரைப் பாகில் போட்டு இலேகியமாகச் செய்து சாப்பிட சீதக்கழிச்சல், வெள்ளை, மேல் எரிச்சல், குருதியழல், தலைகனம், எலும்பைப் பற்றிய சுரம் தீரும்.

வெந்தயம், கடுகு, பெருங்காயம், கறிமஞ்சள் இவைகளை சமபாகம் எடுத்து நெய் விட்டு வறுத்து பொடி செய்து சோற்றுடன் கலந்துண்ண வயிற்றுவலி, பொருமல், வலப்பாடு இடப்பாட்டீரல் வீக்கங்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வரும்.

மிளகாய், கடுகு, வெந்தயம், துவரம் பருப்பு, பெருங்காயம், கருவேப்பிலை இவைகளைத் தக்க அளவு எடுத்து நெய்விட்டு வறுத்து புளிக்குழம்பை இதில் கொட்டி உப்பு சேர்த்து சட்டியிலிட்டு அரைப்பாகம் சுண்டிய பின் இறக்கி சூட்டுடன் சாப்பிட வெப்பத்தால் நேரிடும் சிற்சில பிணிகள் தணியும். வெந்தயத்தை, சீமை அத்திப்பழம் சேர்த்தரைத்து கட்டிகளின் மீது பற்றுப்போட அவைகள் உடையும். படைகள் மீது பூச அவைகள் மாறும்.

வெந்தயத்தை, சீமைப்புளி, அத்திப் பழம், திராட்சை ஒரே எடையாகச் சேர்த்து குடிநீரிட்டு தேன் சிறிது கலந்து சாப்பிட இதயவலி, மூச்சடைப்பு போகும். வெந்தயத்தை வேக வைத்து தேன் விட்டுக்கடைந்து உட்கொள்ள மலத்தை வெளியேற்றும். இது மார்புவலி, இருமல், மூலம், உட்புண் இவைகளைப் போக்கும்.

நற்சீரகம் 100கிராம், ஓமம் 100கிராம், இரண்டையும் இளம் வறுப்பாய் வறுத்து கற்கண்டு 100கிராம் சேர்த்து மூன்று வேளையும் சுடுநீரில் குடித்து வரவேண்டும். வயிற்று வலி பூரண குணமாகி விடும்.

அதிமதுரம் 50கிராம், இந்துப்பு 50கிராம், நவாச்சாரம் 50கிராம் மூன்றையும் பொடியாக்கி 3 கிராம் அளவு வெற்றிலையில் வைத்து மென்று சாப்பிட குணமாகும்.

முருங்கையிலைச்சாறு 50 கிராம், நற்சீரகம் 50 கிராம் இரண்டும் கலக்கும் வரையில் அரைத்துக் குடிக்கத் தீராத வயிற்று



வலிகள் தீரும். சில நாட்கள் தொடர்ந்து கொடுத்துவந்தால் நாள்பட்ட வயற்றுவலி குணமாகும்.

அருகம்புல் 100 கிராம், முற்றிய வேப்பிலை 100 கிராம் எடுத்து நன்கு இடித்து தண்ணீர் ஊற்றி சாறு எடுத்துப் பருகினால் வயிற்றுவலி நாட்பட்டதாக இருந்தாலும் 15-20 நாட்கள் குடித்து வந்தால் கண்டிப்பாகக் குணம் ஏற்படும்.

சுத்தமான களிமண்ணை மாவுபோல் பிசைந்து அடையைப் போல் தட்டி அடி வயிற்றின் மேல் கட்டி வைத்து சுமார் 3 மணி நேரம் கழித்து எடுத்துப் போட்டுவிடவேண்டும். வெயிலில் வேலை செய்து திரும்பியவர்கள் வயிற்று வலி நீர் இறங்கவில்லை என்று கூறினால் மல்லாந்து படுக்கவைத்து வயிறு முழுவதும் விளக்கெண்ணெய் பூசி வைத்தால் வயிற்றுவலி குறையும்.

அதிகமான கவலை, மனஉளச்சல், உணர்ச்சிவேகமான செயல்பாடுகள் போன்ற காரணங்களால் வயிற்றில் அமிலங்கள் சுரக்கின்றன. இந்த அமிலங்களின் தாக்கத்தால் தான் பெரும்பாலும் வயிற்றில் புண்ணுண்டாகிறது. இதனால் பசி குறைதல், வயிற்றில் வலி, செரிமானம் குறைதல் போன்றவை ஏற்படுகின்றது.

வயிற்றுவலியை நிரந்தரமாகப் போக்குவதற்கு முற்றிய அத்தியிலை , வேப்பிலை, கீழ்காய் நெல்லி இலை ,குப்பை மேனி ஆகியவற்றைச் சேகரித்து, நன்கு உலர்த்தி பொடித்து வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு மூன்று வேளையும், (உணவிற்கு முன்னால்) 5 கிராம் தூளை வாயிலிட்டுத் தண்ணீர் குடித்து வந்தால் வயிற்றுப்புண் ஆறி பூரண குணம் பெறலாம்.


ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்
Contact :
Dr.G.Sritharan
B.S.M.S (SL),M.Phil (Jaff)
No- 65 K.K.S. Road, Kokuvil Tel : 0750413579, 0778201195, 0212222537
E mail : gsritharan09@gmail.com

# கவிதைத்தூறல்

## விலக்கி விடுபோதையை

மது தரும் மயக்கமெல்லாம்
விதி செய்யும் வேலையென்று
சதி செய்யும் உன் வாழ்க்கை
சாவிற்கே கொண்டு செல்லும்
கதியென்று மதுவை நினைத்திராதே
காவும் நோய்க்கு ஆளாகாதே
கனவுக்கான உன் போதை
கலக்கத்தை உண்டு பண்ணும்
போதை தன்னில் நீ மீண்டால்
பூமி தன்னில் நீ உயர்வாய்!

பலகாலமாய் நீ சேர்த்த
பலநூறு நன்மைகள் தானும்
சில நாழிகைக்குள்
சிதைவுறாமலிருக்க
சிந்தித்து நீ பார்த்தால்
சிதையாது உன் வாழ்க்கை!
அலைமோதும் மனம் தன்னில்
விலையாக ஏன் போதை....?
எதிர்பார்ப்புக்கள் நிறைந்த
உன்வாழ்வு
எரிந்துபோகவிடலாமோ?



விரும்பாதே போதையை
வெறுப்பாகிப் போகும்
உன்வாழ்வு
கரும்பாக உன் மனத்தைக்
கட்டி நீவைத்திருந்தால்
காலமெல்லாம்
இவ் உலகம் உன்காலடியில்!

சூரியனாய் நீயிருந்தால்
சுற்றிவரும்பலகோள்கள்
சுழன்றுபோகாமல்உன்மனதை
விலங்கிட்டுக் காத்திருப்பாய்
விலகும் உன் துயரெல்லாம்
துலங்கும் உன் பெயர் கூட....!

அல்லல்படும் வாழ்க்கைக்குப்
போதை அது வழியல்ல!
புரிந்துகொள் உன்வாழ்வை
தெரிந்து விடும் உன்பாதை!
விரும்பிஅதை வெறுத்துவிடு
விளையும் வெளிச்சம்
உன்வாழ்வில்!

குறிஞ்சிக்கவி- செ. ரவிசாந்




## மகிந்தருக்கு ஒரு மடல்

முடி சூடா மன்னனே -இன்று
முடி இழந்ததேனோ?
முள்ளிவாய்க்காலில் -தமிழர்களுக்கு
முற்றுப்புள்ளி வைத்தாய்
தேர்தல் மேடையில் -மீண்டும்
முற்றுப்புள்ளி வைக்க போகிறார்கள்- உனக்கு
ஆட்சிக்காக பலியெடுத்த உன் கரங்கள்
ஆட்சி மாற்றத்தை வேண்டி கரம் நீளுகிறதே

- சந்தியா












1
அழகராஜா யோகேஸ்வரன்
(புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி மற்றும் பேராதனை பல்கலைக்கழக சமூகவியல் துறை மாணவன்)
2
ஞானப்பிரகாசம் அலோசியஸ் ராஜ்குமார்
(பிரபல ஆசிரியர்)
3
தர்மலிங்கம் யோகராசா (தீபன்)
(வர்த்தகர்)
4
பாலசுப்ரமணியம் சுபதீசன்
(ஆசிரியர்)
5
இராஜேந்திரன் வசந்தகுமார்
(அதிபர்)
6
வன்னியசிங்கம் கபிலன்
(ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க செயலாளர்)
7
வீரப்பிள்ளை வீரகுமார்
(பிரபல ஆசிரியர்)
8
சிவசுப்ரமணியம் பார்த்திபன்
(உதவி பொறியியலாளர் மற்றும் வருகைதரு விரிவுரையாளர்)
9
புதிய நாடு - புதிய தலைவர் - புதிய தலைமுறை - புதிய எதிர்பார்ப்பு


சுயேட்சைக்குழு-06
1
வ.அன்னலட்சுமி
(முன்னாள் போராளி)
2
ஜெ.ஜெயசுலக்சன்
(வேலையில்லா பட்டதாரி)
3
த.ஜெயந்திரன்
(ஒப்பந்தக்காரர்)
4
தா.லோகேஸ்வரன்
(சட்டவாளர்)
5
நா.கிருஸ்ணமுகன்
(சமூக சேவையாளன்)
6
சிவன் பவுண்டேசன் ஸ்தாபகர்
வேலாயுதம் கணேஸ்வரம்
(கொடைவள்ளல், சமூக ஆர்வலர்)
7
சபா.பரமேஸ்வரன்
(சமூகப் போராளி)
8
சு.சிவாஜினி
(சமூக சேவையாளர்)
9
சு.சதீசன்
(சமூக சேவையாளர்)
10
செ.ஆனந்தறஞ்சன்
(சமயத் தலைவர்)


பாராளுமன்றத் தேர்தல் 2015
"சவால்களைச் சாத்தியமாக்கவும் கனவுகளை நிஜமாக்கவும் மாற்றத்திற்காய் வாக்களிப்போம்"
வைத்தியர்
இ. சிவசங்கர்
6
ஐக்கிய தேசியக் கட்சி


அருந்தவபாலன் கந்தையா
1
ஆனந்தராஜ் நடராஜா
2
ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம்
3
மாவை சோமசுந்தரம் சேனாதிராசா
9
சுரேஸ் பிரேமச்சந்திரன்
4
ஈஸ்வரபாதம் சரவணபவன்
5
கந்தர் நல்லதம்பி ஸ்ரீகாந்தா
6
இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் யாழ், கிளி தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களும் அவர்களின் இலக்கங்களும்
தருமலிங்கம் சித்தார்த்தன்
7
மதினி நெல்சன்
8
சிவஞானம் சிறிதரன்
10


பாராளுமன்றத் தேர்தல் 2015
வன்னி தேர்தல் தொகுதி
வலி தந்தோர்க்கும் வடக்கை அழிக்க நினைப்போர்க்கும் எமது வாக்குச்சீட்டின் மூலம் பதிலடி கொடுப்போம்
1 2 3 4 5 6 7 8 9
திரு. இ.சாள்ஸ் நிர்மலநாதன்
தொழிலதிபர்
பிரஜைகள் குழு உபதலைவர்
இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ் தேசிய கூட்டமைப்பு)
3

# Tamilcnn.lk Tamil community news network இன் இலங்கைக்கான பிரதான காரியாலயத்தை யாழில் திறந்துவைத்த வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன்
















வடமாகாண சபை முதலமைச்சர் சி. வி விக்னேஸ்வரன், வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வடமாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், டாக்டர். தியாகராஜா, மாகாண சபை உறுப்பினர்கள் திரு. சுகிர்தன், திரு கஜதீபன், திரு. அங்கஜன் ராமநாதன், மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் வேணுகா சண்முகரத்தினம், வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம் அவர்களும், யசோ மோட்டார்ஸ் உரிமையாளர் யசோகரன், சாரங்கா நகைமாளிகை உரிமையாளர் சிவா, GREEN GRASS HOTEL AND RESTAURANT உரிமையாளர் ஜெகன், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







**Tamilcnn.lk**
Tamil community news network

## இன் கிழக்கு மாகாணத்திற்கான காரியாலய ஆரம்ப வைபவத்தின்போது...





**Tamilcnn.lk**
Tamil community news network

## இன் வன்னி பிராந்திய காரியாலயம் வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது...





**Tamilcnn.lk**
Tamil community news network

## இன் தென்மராட்சி வலயத்திற்கான காரியாலய ஆரம்ப வைபவத்தின்போது...






**DAVID MOBILE WORD**
No.32, Market Circular Road, Vavuniya.
Tel: 077 1233600

# திம்புக் கோட்பாட்டை வலியுறுத்தும் கூட்டமைப்பு

## தேர்தல் விஞ்ஞாபனம் இதுவே...



பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் திம்புக் கோட்பாட்டை வலியுறுத்தியே அமையப் பெற்றுள்ளது.

2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமானது முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு திம்புக் கோட்பாட்டை மையமாக வைத்து அமைய வேண்டும், செப்ரெம்பர் மாதம் மாதம் வெளியாகும் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை முழுமையாக நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போரின் பின்னரான அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு, அபிவிருத்தி தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வு, வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர் ஒரு தேசிய இனம் அவர்களுக்கான சுயநிர்ணய உரிமை, இறையாண்மை, சுயாட்சி அடிப்படையிலான தீர்வு, போரின் பின்னரான இராணுவ வெளியேற்றம், இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனவர்கள் தொடர்பிலான விவகாரம், போராளிகளின் வாழ்வாதாரம், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலை என்பவற்றை வலியுறுத்துவதுடன்,

வடக்கு- கிழக்கு அபிவிருத்தி, பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக்கல், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல், நிலத்தடி நீர்ப் பிரச்சினைக்கு உரிய தீர்வினைப் பெறல், வன்னி மாவட்டத்தில் குளங்களை புனரமைப்பு செய்தல், போதைப் பொருள் பாவனையைக் குறைத்தல், பாலியல் துஷ்பிரயோகங்களை இல்லாதொழித்தல், இவை இம்முறை பொதுத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனமாக அமைகின்றன. ■

















